



# தமிழரசு

16.12.1995 ரூ.3










# இந்த இதழில்...


விளையாட்டுத்துறைக்கு
ஒரு புதிய பரிமாணம்
மாண்புமிகு முதல்வர் உரை ........................ 2

இந்திய மண்ணெங்கும் வலம்வந்து
ஒளிவீசிய சுடரோட்டத்தின்
வெற்றிப் பயணம்........................................ 7

புதிய சகாப்தத்தின் தொடக்க விழா!
- மாண்புமிகு முதல்வர் உரை ...................... 9

புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா
உள்ளுறை விளையாட்டரங்கம் ................. 17

ஏழாவது தெற்காசிய விளையாட்டுப்
போட்டிகளின் நிகழ்ச்சி நிரல்................. 22

கவினுறு கலைநிகழ்ச்சிகள்........................ 24

தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள்:
பதக்கப் பட்டியல் ........................................ 29

'சிட்கோ' படைக்கும் புதிய சாதனை ....... 34










தமிழரசு

திருவள்ளுவராண்டு - 2026

மார்கழித் திங்கள் : 1

மலர்: 26 இதழ்: 12

16.12.1995

விலை ரூபாய் : 3


## இதழ்தோறும் ஓர் இனிய குறள்:

**ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா**
**ஊக்க முடையா னுழை.**

★ சோர்வு இல்லாத ஊக்கம் உடைய வனிடத்தில் ஆக்கமானது தானே அவன் உள்ள இடத்திற்கு வழிகேட்டுக் கொண்டு போய்ச் சேரும்.



# "விளையாட்டுத் துறைக்கு ஒரு புதிய பரிமாணம்"

- மாண்புமிகு முதல்வர்

***சென்னை கோயம்பேட்டில் 13.12.1995 அன்று நடைபெற்ற ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிக்கான விளையாட்டு நகரம் திறப்பு விழா மற்றும் தமிழ்நாடு சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கான புதிய குடியிருப்புக் கட்டடங்கள் உள்பட புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டு விழாவில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை.***

இந்திய விளையாட்டு வரைபடத்தில், ஏன் சர்வதேச விளையாட்டு வரைபடத்திலும், தமிழகத்திற்கு ஒரு தனி இடத்தைப் பெற்றுத் தரும் வரலாற்றுச் சிறப்பு மிக்க, தெற்காசிய கூட்டமைப்பு விளையாட்டுப் போட்டிகளையொட்டி, கவின்மிகு சென்னை மாநகரில், கலை அம்சங்களுடன் நிர்மாணிக்கப்பட்டுள்ள, SAF Games Village-ஐ விளையாட்டு நகரத்தைத் திறந்து வைத்து, தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்களுக்கான புதிய அடுக்குமாடி குடியிருப்புக்கட்டடங்கள் உள்பட பல புதிய கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டி உங்கள் அனைவரையும் காண்பதில் நான் பெருமகிழ்ச்சியும், பேருவகையும் அடைகிறேன்.

தமிழகத்தில், நெடுங்காலமாகச் செயலற்று முடங்கிக்கிடந்த பல துறைகளுக்கு, நாங்கள் ஆட்சிக்கு வந்த பின்பு, எங்கள் அரசு ஒரு புதிய ஆக்கத்தையும், ஊக்கத்தையும் கொடுத்து அந்தத் துறைகளில் விரைந்த வளர்ச்சிக்கும் வித்திட்டுள்ளது. அப்படி ஒதுக்கப்பட்டுக்கவனிப்பாரற்றுக் கிடந்த துறைகளில், விளையாட்டுத் துறையும் ஒன்று. கவனிப்பாரற்று இருந்த விளையாட்டுத்துறை, இன்று நமது அனைவரின் கவனத்தை ஈர்த்துள்ளதோடு, ஒரு புதிய எழுச்சியையும், ஏற்றத்தையும் உங்கள் அன்புச் சகோதரியின் ஆட்சியில் பெற்றுள்ளது என்றால் அது மிகையாகாது.

தமிழ்நாட்டில் விளையாட்டை விளையாட்டாகக் கருதுகின்ற காலம் இன்று மாறிவிட்டது. விளையாட்டுத்





துறைக்கு இன்று ஒரு புதிய பரிமாணம் கிடைத்துள்ளது. தமிழகத்தில், பல இடங்களில் கட்டப்பட்டு வரும் விளையாட்டு அரங்கங்களும், விளையாட்டு களை ஊக்குவிக்கும் புதிய அமைப்புகளும் இன்று மக்கள் மத்தியில் ஒரு விளையாட்டு உணர்வை Sports Spiritஐ ஏற்படுத்தி உள்ளதை எவரும் மறுக்க முடியாது. குறிப்பாக, வளரும் தலைமுறையினர் இடையே, விளையாட்டு உணர் வையும், எதையும் Sportive-ஆக எடுத்துக் கொள்ள வேண்டிய பரந்த மனப்பான்மையையும், வளர்க்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து விளை யாட்டுத்துறைக்கு, நாங்கள் புதிய பொலிவினைக் கொடுத்துள் ளோம்.

ஒரு காலத்தில் அரசிட மிருந்து, ஏதேனும் உதவி கிடைக்காதா என்று விளை யாட்டுத் திறன் படைத்த இளைஞர் கூட்டம் சுற்றி வந்த நிலை, இன்று முழுவதுமாக மாறி எங்கள் ஆட்சிக்காலத்தில் அத்தகைய தகுதி படைத்த இளைய தலைமுறையினரை அரசே தேடிச் சென்று உதவிகளை வழங்கும் வர வேற்கத் தக்க சூழ்நிலை ஏற் பட்டுள்ளது. அவர்களது திறமை களை வளர்க்க நிதி கொடுப் பதில் ஆகட்டும், அவர்கள் போட்டிகளில் பங்கு கொள்ளவும் பல்கலைத் திறமை களை வளர்த்துக் கொள்ளவும் உதவிகள் அளிப்பதில் ஆகட்டும், விளையாட்டை மேம்படுத்த புதிய திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்துவதில் ஆகட்டும், நாங்கள் ஒரு தனி உற்சாகத் துடனேயே இதுவரை பணி யாற்றி வந்துள்ளோம். விளை யாட்டுத் துறைக்கு ஒரு புதிய மறுமலர்ச்சியை உண்டாக்க தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் Sports Development Authority of Tamil Nadu என்ற ஒரு அமைப்பு எங்கள் ஆட்சிக்காலத்தில் ஏற் படுத்தப்பட்டது. கடந்த நான்கரை ஆண்டுக் கால கட்டத்தில், விளையாட்டு உணர்வு மக்கள் மத்தியில் மீண்டும் ஒரு புதிய மதிப்பையும, அங்கீகாரத்தையும் பெற் றுள்ளது. புதிய விளையாட்டு அரங்கங்களும், புதிய அமைப்பு களும் இன்று உருவாகி உள்ளன. மாநில அளவிலும், தேசிய அளவிலும் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற விளையாட்டு வீரர்களையும், வீராங்கனை களையும், நாங்கள் தேடிச் சென்று பரிசுகளை வழங்கி ஊக்குவித்து வருகின்றோம். தமிழக விளையாட்டுத்துறையின் வளர்ச்சிக்குச் சிகரம் வைத்தது போல, நடைபெற உள்ள ஏழாவது தெற்காசிய நாடுகள் கூட்டமைப்பு விளையாட்டுப் போட்டிகள், உண்மையில் நமக்கு மாபெரும் மகிழ்ச்சியைத் தரும் நிகழ்ச்சி ஆகும்.

ஒரு நாட்டின் தலைநகரத்தில் நடைபெற வேண்டிய மாபெரும் விளையாட்டுப் போட்டிகள், இங்கே. ஒரு மாநிலத்தின் தலைநகரத்தில் நடத்த முற்பட்ட போது, சர்வதேசத் தரத்தில் விளையாட்டு அரங்கங்களும்,

போட்டியாளர்கள் தங்குவதற்கு விடுதி வசதிகளும், சென்னையில் இல்லையே ? எப்படி இந்த விளையாட்டுப் போட்டிகளை நடத்த முடியும்? என்று, சிலர் கேள்விக் கணைகளைத் தொடுத்தார்கள். தமிழக மக்களின் பேராதரவு மட்டும் எங்களுக்குத்துணையாக இருந்தால், இந்த உலகத்தில் எங்களால் எதையும் சாதிக்க முடியும் என்று துணிவுடன் செயல்பட்டோம். நம்மிடம் இல்லாத விளையாட்டு வசதிகளை உருவாக்கி, சென்னை மாநகரம் ஒரு மாபெரும் Sports City என்பதை நிரூபிக்க வேண்டும் என்று உறுதி பூண்டோம். இன்று 240 கோடி ரூபாய்க்கும் அதிகமான செலவில் பல புதிய விளையாட்டு அரங்கங்கள், சர்வ தேசத் தரத்தில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

டென்னிஸ் விளையாட்டரங்கம், ஹாக்கி விளையாட்டரங்கம், நீர் விளையாட்டு வளாகம், விளையாட்டு உள்ளரங்கம், கால்பந்து விளையாட்டரங்கம், சர்வதேசத்தரத்தில் ஓடு தளம் என்று, சென்னை நகரின் பல பாகங்களில், புதிய விளையாட்டுச் சின்னங்கள் உருவாகி உள்ளன. Our sole aim is to make Tamil Nadu the best destination for Sports in India and we have achieved our goal to a great extent. சர்வதேச அளவிலான விளையாட்டுப் போட்டிகளை எப்படி சென்னையில் நடத்த முடியும் என்று நம்மை வெளி மாநிலத்தினர் கேட்கும் நிலையை இன்று அடியோடு மாற்றியுள்ளோம்.

> ☆ விளையாடுவது எந்த அளவிற்கு முக்கியமோ அதைவிட முக்கியம் வசதிகளோடு தங்குவது என்பதை உணர்ந்த மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் அரசு 35 ஏக்கர் நிலப்பரப்பில், அண்ணாநகர் அருகே, கோயம்பேடு என்னுமிடத்தில் 70 கோடி ரூபாய் செலவில், விளையாட்டு வீரர்கள் தங்கிட விளையாட்டு நகரம் ஒன்றை உருவாக்கித் தந்துள்ளது.

இந்த தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் சென்னையில் நடைபெறுவதற்கு பெருமுயற்சிகளை மேற்கொண்டவர் இந்திய ஒலிம்பிக் சங்கத்தின் தலைவர் திரு. பா சிவந்தி ஆதித்தன் அவர்கள். சென்னையில் இந்தப்போட்டிகள் நடைபெறுவதில் அவருக்குப் பெரும் பங்கு உண்டு. எனவே, திரு. பா. சிவந்தி ஆதித்தன் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விளையாட்டு நகரம் அமைக்கக் கடனுதவி வழங்கி ஒத்துழைப்பு நல்கிய ஹட்கோ நிறுவனத்திற்கும், அதன் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு.பட்நாகர் அவர்களுக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இயற்கைச் சூழல்கள் இயல்பாகப் பொருந்திய சில அமைப்புகளுடன் நிர்மாணிக்கப்பட்ட இந்த விளையாட்டு நகரத்தில் வெளிநாட்டவரும் மற்ற மாநிலத்தவரும் வந்து தங்கியிருந்து, தமிழகத்தைப் பற்றிய, இனிய நினைவுகளுடன் திரும்பிச் செல்வார்கள் என்பது உறுதி. எல்லா அடிப்படை வசதிகளுடன், கவினுற அமைக்கப்பட்ட இந்த விளையாட்டு நகரம், சென்னை மாநகரத்தின் ஒரு முக்கியமான Land Mark-ஆக அமையும் என்று உறுதியாக நம்புகிறேன்.

சென்னையில், சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கியிருக்க, விடுதி வசதி மட்டுமே செய்து தரப்பட்டுள்ளது. ஆனால், குடும்பத்துடன் தங்கி இருக்க, குடியிருப்பு வசதிகள் செய்து தரப்படவில்லை. டெல்லியில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குக் குடியிருப்பு வசதிகள் செய்து தரப்பட்டுள்ளதைப் போலவே, தமிழகச் சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும், எல்லா வசதிகளுடன் கூடிய குடியிருப்புகளில் தங்கி வாழ்வதற்குக் குடியிருப்பு வசதிகள் செய்து தர வேண்டும் என்று, நாங்கள் முடிவு செய்தோம். எதைச் செய்தாலும், அதை நன்றாகச் செய்தாக வேண்டும், அதையும் விரைந்து செய்தாக வேண்டும் என்பதே எங்கள் குறிக்கோள்.

எனவேதான் சட்டமன்ற உறுப்பினர்களுக்குப் புதிய அடுக்குமாடிக் குடியிருப்புகளை, நகரத்தின் மையப் பகுதியில் கட்டித் தருவது என்று தீர்மானித்தோம். தற்போது ராஜாஜி ஹால் அமைந்துள்ள பகுதிக்கு அருகில் உள்ள நிலப்பரப்பில், 40 கோடி ரூபாய் செலவில் இந்த வானுயர்ந்த

அடுக்கு மாடிக் குடியிருப்புக் கட்டடங்களை நிர்மாணிக்க முடிவு செய்தோம். அந்தச் சீரிய திட்டத்திற்கு இன்று அடிக்கல் நாட்டியதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

'ஒரு குடும்பம் ஒரு வீடு' என்கின்ற எங்களது கொள்கையை முனைப்புடன் செயல்படுத்தி வரும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், இன்று ஒரு மாபெரும் இயக்கமாக மாறி உள்ளது. 1991-ஆம் ஆண்டில், 100 கோடி ரூபாய் அளவில் மட்டுமே, வீட்டு வசதிகளை உருவாக்கித் தந்த இந்த வாரியத்தின் நிதி ஒதுக்கீடு, ஆண்டுதோறும் படிப்படியாக, அதிகரித்து, இந்த நிதியாண்டில் மட்டும், 242 கோடி ரூபாய் அளவிற்கு உயர்ந்துள்ளது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்த நான்கரை ஆண்டு கால கட்டத்தில், இந்த வாரியத்தின் குடியிருப்பு வசதிகளுக்கான செலவினம் கிட்டத்தட்ட இரண்டரை மடங்காக அதிகரித்துள்ளது, நினைத்து மகிழத்தக்க ஒரு சாதனை ஆகும்.

சென்னை அம்பத்தூர் தொழிற்பேட்டைக்கு அருகே, 40 கோடி ரூபாய் செலவில், 160 ஹெக்டேர் நிலப்பரப்பில், உருவாக்கப்பட்டு வரும் 10,406 மேம்படுத்தப்பட்ட குடியிருப்பு மனைகள் வீட்டு வசதி வரலாற்றில் ஒரு புதிய மைல் கல்லாக அமையும் என்பதில் சந்தேகம் இல்லை. ஆசிய கண்டத்திலேயே, ஒரே இடத்தில் கட்டப்பட்ட, மிகப்பெரிய வீட்டு வசதித்திட்டமாக 'Neighbourhood Scheme' ஆக, இத்திட்டம் அமையப் போகிறது என்பது உண்மையிலேயே நமக்குப் பெருமை தரக்கூடிய செய்தி ஆகும்.

ஆசிய வளர்ச்சி வங்கி அதாவது 'Asian Development Bank' மூலம் 1,055 கோடி ரூபாய் நிதி உதவி பெற்று, புதிய வீட்டு வசதித் திட்டங்களைச் செயல்படுத்த, எங்கள் அரசு ஆக்கப் பூர்வமான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

தமிழ்நாடு வீட்டு வசதி

தெற்காசிய விளையாட்டுப் போட்டி;

## இந்திய கைப்பந்து அணி

**சென்னையில் நடைபெறும் ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளில் பங்கு கொள்ளும் இந்திய கைப்பந்து அணிகளின் பெயர்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. கைப்பந்து போட்டிகள் டிசம்பர் 22 முதல் 26 வரை கீழ்ப் பாக்கத்திலுள்ள புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா உள்ளுறை விளையாட்டரங்கில் நடைபெறுகிறது.**

| ஆண்கள் அணி | பெண்கள் அணி |
|---|---|
| ரவி காந்த் ரெட்டி | சலோமி ராமு |
| கே. வெங்கடநாராயணா | கே. சங்கீதா |
| ஜோபி ஜோசப் | பி.ஆர்.தேவி |
| பி.பி.அமன் | ஹேமலதா உர்சல் |
| ராஜ் வினோத் | மினி எலிசபெத் |
| மனோஜ் ரெட்டி | ஆஷாராணி |
| எம்.எஸ்.ராஜேஷ் | சுனு ஜேக்கப் |
| ரத்தன்லால் | மகமாய சமதார் |
| சந்திரசேகர் | ஆர். அனுராதா |
| சேகர் | பி.வைசாலி |
| சுர்ஜித் சிங் | மெர்சி அந்தோணி |
| சிங்கராவ் | எம். சுனிதா |
| **மாற்று விளையாட்டு வீரர்கள்** | **தலைமைப் பயிற்சியாளர்** |
| திரு.நாகராஜ் ஹெக்டே | திரு.வி.ஜி.நாயர் |
| பிரேம்ஜித் | **துணைப்பயிற்சியாளர்** |
| பிரவீண் குமார் | திருமதி. அனுராதா |
| **தலைமைப்பயிற்சியாளர்** | **மேலாளர்** |
| திரு.சியாம்சுந்தர் ராவ் | திரு. வெங்கடபதி |
| **துணைப்பயிற்சியாளர்** | |
| திரு. ஈ.ஆர்.ரெட்டி | |
| **பயிற்றுநர்** | |
| திரு. பாண்டியன் | |
| **மேலாளர்** | |
| திரு.ஆர்.கி.சர்மா | |



☆ விளையாட்டுப் போட்டிகளின் வெற்றிக்காக அமைக்கப்பட்டுள்ள புதிய விளையாட்டு அரங்கங்கள் ஏழு. எழும்பூரில் ரயில் நிலையம் அருகே மேயர் இராதாகிருஷ்ணன் விளையாட்டு அரங்கில் அதிநவீன ஆக்கி மைதானம், வள்ளுவர் கோட்டத்தின் அருகே நுங்கம் பாக்கத்தில் அதிநவீன டென்னிஸ் மைதானம், வேளச்சேரியில் நீச்சல் குளம், ஆவடி வீராபுரத்தில் துப்பாக்கி சுடும் மைதானம், ஜூடோ மற்றும் பளுதூக்கும் போட்டிகள் நடக்க கலைவாணர் அரங்கில் நவீன வசதிகள் அமைப்பு, சாந்தோமில், சாந்தோம் மேல்நிலைப்பள்ளியில் டேபிள் டென்னிஸ் அரங்கம்.

☆ உலகத் தரத்தோடு கூடிய பல விளையாட்டு அரங்குகள், போட்டியில் பங்கேற்க வரும் வீரர்களும் வீராங்கனைகளும் தங்கிட இல்லங்கள். விளையாட்டுத் துறையில் அளப்பரிய வளர்ச்சி, அனைத்து விளையாட்டுகளிலும் இளைஞர்கள் பங்கேற்க ஆக்கபூர்வமான ஊக்கம். உலகின் பார்வையில், இந்தியாவுக்கும் தமிழகத்திற்கும் தனிப்பெருமை- இவையே தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் நடத்துவதன் மூலம் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், தமிழகத்தின் மக்களுக்கு வழங்குகின்ற பரிசுகளாகும்.

---

வாரியம் வைத்துள்ள நிலங்களுக்கு, Urban Land Tax அதாவது, நகர்ப்புற நில வரி செலுத்த வேண்டியதில்லை என்கின்ற ஒரு சலுகை திரும்பப் பெறப்பட்டதால், அந்த நிலங்களுக்கான நகர்ப்புற நில வரியை, வாரியம் கட்ட வேண்டிய அவசியம் ஏற்பட்டு உள்ளதாகவும், இதனால் வாரியத்திற்குப் பொருளாதார இழப்பு ஏற்பட்டு வருவதாகவும் எனவே, இந்தச் சலுகையை, வாரியத்திற்கு மீண்டும் அளிக்க வேண்டும் என்று தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் தலைவர் திரு என்.பாலகங்கா கேட்டுக்கொண்டார்.

ஏழை, எளிய மக்கள், நலன் பெற, குறைந்த விலையில் நிறைவான வீட்டு வசதியைப் பெற்றுத்தர உறுதி பூண்டுள்ள எங்கள் அரசு, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திடம் உள்ள நிலங்களுக்கு நகர்ப்புற நில வரி அதாவது, Urban Land Taxலிருந்து முழுமையான விலக்கை, இன்று முதல் அளிக்கும் என்பதையும், இந்தச் சலுகை 1991-ஆம் ஆண்டிலிருந்தே முன் தேதியிட்டு வழங்கப்படும் என்பதையும் மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் பணியாளர்கள் மற்றும் ஊழியர்களின் குழந்தைகள் பயன்பெறும் வண்ணம், வாரியத்தின் சார்பில் ஒரு புதிய தொழில் நுட்பக்கல்லூரி அதாவது, Polytechnic ஒன்றை நிறுவ வேண்டும் என்ற கோரிக்கை, தமிழக அரசின் பரிசீலனையில் இருந்து வருகின்றது. இவ்வாரியத்தின் தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, வாரியத்தின் சார்பில், ஒரு Polytechnic ஆரம்பிப்பதற்கு விரைவில் அரசுத் தரப்பிலிருந்து அனுமதி வழங்கப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தச் சீரிய விழாவினை மிகக்குறுகிய காலத்தில் சிறப்பான முறையில் ஏற்பாடு செய்துள்ள, மாண்புமிகு வீட்டு வசதித்துறை அமைச்சர் அன்புச் சகோதரர் திரு எஸ். ரகுபதி, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் தலைவர், திரு என். பாலகங்கா மற்றும் அரசு அலுவலர்கள் அனைவருக்கும் எனது பாராட்டுதல்களையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தெற்காசிய நாடுகள் கூட்டமைப்பு விளையாட்டுப் போட்டிகள் சென்னையில் உருவாக்கியுள்ள ஒரு புதிய விளையாட்டு விழிப்புணர்ச்சி, தமிழகத்தை விளையாட்டுத் துறையில் என்றென்றும் முன்னணியில் நிறுத்தும் என்று உறுதியாக நம்புகிறேன். இந்த விளையாட்டு நகரம், உங்கள் அன்புச் சகோதரியின் அரசு, விளையாட்டுத்துறையில் கொண்டுள்ள ஆத்மார்த்த ஈடுபாட்டின் நினைவுச்சின்னமாக என்றென்றும் விளங்க வேண்டும் என்ற, எனது உள்ளக் கிடக்கையை எடுத்துரைத்து விடை பெறுகிறேன்.

**உலகமே வியந்து நோக்க, ஈடும் இணையும் இல்லாத வகையில், 18.12.95 லிருந்து, 27.12.95 முடிய நடைபெற விருக்கும் ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளின் பெருமைமிகு சுடர், இந்திய மண்ணெங்கும் வலம் வந்து, ஒளி வீசி வெற்றிப் பயணத்தை நிகழ்த்தியுள்ளது.**

ஆறாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டி, வங்காளதேசத் தலைநகரான டாக்காவில் 1993-ஆம் ஆண்டு



# இந்திய மண்ணெங்கும் வலம் வந்து ஒளி வீசிய சுடரோட்டத்தின் வெற்றிப் பயணம்



நடைபெற்றது. அங்கிருந்து தெற்காசிய விளையாட்டுப் போட்டிச் சுடரை, மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் க. பொன்னுசாமி அவர்கள், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெஜெயலலிதா அவர்களின் ஆணையின் பேரில் பெற்று வந்தார். மீண்டும் தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் தொடங்கும்போது அதனை ஏற்றி வைப்பது மரபு. ஆனால், மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள், இவ்விளையாட்டுச் சுடர் இந்திய மண்ணெங்கும் வலம் வந்து அதன்மூலம் விளையாட்டு உணர்வுகளுக்குப் புதுமெருகும், இந்திய ஒருமைப்பாட்டுக்குப் புத்துணர்வும் வழங்கிட வேண்டும் என்று விரும்பினார்.

இதன்படி, 28.10.95 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களால் சுடரோட்டம் சீர்மிகு சென்னையில் தொடக்கி வைக்கப்பட்டு பம்பாய், அகமதாபாத், ஜெய்ப்பூர், ஜம்மு, சண்டிகர், சிம்லா, டெல்லி, போபால், லக்னோ, பாட்னா, கல்கத்தா, அகர்தலா, காங்டாக், இம்பால், கொஹிமா, ஷில்லாங், கௌஹாத்தி, ஈட்டாநகர், ஐஸ்வால், புவனேஸ்வர், ஹைதராபாத், பெங்களூர், கோவா, திருவனந்தபுரம், பாண்டிச்சேரி ஆகிய இடங்களுக்கு வெற்றிப் பயணம் மேற்கொண்டு 17.12.95 அன்று மீண்டும் சென்னை வந்து அடைகிறது.

சென்ற இடமெல்லாம் சீரோடும் சிறப்போடும் வரவேற்கப்பட்டு, ஒருமைப்பாட்டு உணர்வுக்குப் புத்துணர்வு அளித்து, விளையாட்டு உணர்வுகளுக்குப்புதுமெருகு அளிக்க வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் எந்த எண்ணத்துடன் அனுப்பி வைத்தார்களோ, அந்த எண்ணத்தை வெற்றிகரமாக நிறைவேற்றியது, சிறப்புமிக்க இந்தச் சுடரோட்டம்.

பெருமைமிகு இச் சுடரோட்டம் பற்றிய சிறு தொகுப்பு இதோ:



பம்பாய்,

கொள்ளப்பட்டு, ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூருக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

## பம்பாய்

**தெ**ற்காசிய விளையாட்டுப் போட்டிச் சுடர் ஓட்டம் பம்பாய் நகரில் *29.10.95* அன்று நடைபெற்றது. மாண்புமிகு மகாராஷ்டிர மாநிலத் துணை முதலமைச்சர் திரு கோபிநாத் முண்டே அவர்கள் இச்சுடர் ஓட்டத்தினைத் தொடங்கி வைத்தார்.

விழாவில், பம்பாய் மாநகர மேயர் திரு கதம் அவர்கள் கலந்துகொண்டு, சுடரினை மராத்திய அரசின் சிவசத்திரபதி விருதினைப் பெற்ற விளை யாட்டு வீரர் திரு அசோக் மபுஸ்கரிடம் வழங்கினார்.

பின்னர், முலுந்த் ஜிம்கானா மைதானத்தில் நடைபெற்ற விழாவில் நாடாளுமன்ற உறுப் பினர் திரு சத்வி பிரதான் அவர்கள்., சுடரினை அகமதா பாத்திற்கு எடுத்துச் செல்வ தற்காக விளையாட்டு வீரர் திரு ஞான சேகரனிடம் வழங்கினார்.

## அகமதாபாத்

தெற்காசிய விளையாட்டுப் போட்டிச் சுடர் *31.10.95* அன்று குஜராத் மாநிலத் தலைநகரான அகமதாபாத் வந்தடைந்தது.

பம்பாயிலிருந்து கொண்டு வரப்பட்ட சுடரினைக் குஜராத் மாநில ஒலிம்பிக் சங்கத் தலைவர் திரு தேவேந்திர சிங் சோலங்கி பெற்றுக் கொண்டார். ஒலிம்பிக் சங்கத்தின் நிரந்தரத் தலைவர் திரு பி.ஜே. கதாளி விழாவில் வரவேற்புரை நிகழ்த்தினார். அகமதாபாத் மாநகராட்சி மேயர் திருமதி பாவனாபென் தவே அவர்கள் தொடங்கி வைக்க, விளையாட்டு வீரர்கள் திரு ஜெ.என். வாரியா மற்றும் செல்வி பரானாஸ் ஆகியோர் சுடரினைப் பெற்றுக் கொண்டார்கள்.

பின்னர், திரு ஞானசேகரன் அவர்களால் சுடர் பெற்றுக்

## ஜெய்ப்பூர்

ஏழாவது தெற்காசிய விளை யாட்டுப் போட்டிக்கான சுடரை மாண்புமிகு இராஜஸ்தான் மாநில முதலமைச்சர் திரு பைரோன் சிங் செகாவாத் அவர்கள் **2.11.1995** அன்று இராஜஸ்தான் மாநிலத் தலைநகரமான ஜெய்ப்பூரில் பெற்றுக் கொண்டு அதனை ஜெய்ப்பூருக்குக் கொண்டு வந்த தமிழ்நாட்டு விளையாட்டு வீரர் திரு ஞானசேகரனிடம் ஜம்முவுக்குக் கொண்டு செல்ல ஒப்படைத்தார். மாண்புமிகு இராஜஸ்தான் மாநில உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு பவன்லால் சர்மா அவர்கள் சுடர் ஓட்டத்தினை, கொடி அசைத்துத் துவக்கி வைத்தார்.

மாண்புமிகு விளையாட்டுத் துறை அமைச்சர் திரு ரோதக் சர்மா, மாநில விளையாட்டுத் துறைச் செயலாளர் திரு பி.சி. மகதா, இ.ஆ.ப., இந்திய ஒலிம்பிக் சங்கத்தின் துணைத் தலைவர் திரு கேலாட் மற்றும் ராஜஸ்தான் விளையாட்டு இணையத்தின் தலைவர் மேஜர் மாத்தூர் ஆகியோர் இவ்விழா வில் கலந்து கொண்டனர்.

**(தொடர்ச்சி 41-ஆம் பக்கம் பார்க்க)**




அகமதாபாத்,






# புதிய சகாப்தத்தின் தொடக்க விழா!

## தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் வெள்ளி விழா: மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உரை

**த**மிழக நகர்ப்புற வளர்ச்சியின் ஒரு முக்கிய அங்கமாக விளங்குகின்ற தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் வெள்ளி விழா நிகழ்ச்சியில் கலந்துகொண்டு, பெருந்திரளாகக் குழுமி இருக்கும் உங்கள் அனைவரையும் காண்பதில், நான் பெருமகிழ்ச்சியும் பேருவகையும் அடைகின்றேன்.

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம், வெள்ளி விழா ஆண்டில் வெற்றிநடைபோட்டு வருகின்ற நல்லதொரு சூழ்நிலையில் இந்த அமைப்பின் அங்கங்களாகப் பணியாற்றி வரும் இயக்குநர்கள், பொறியாளர்கள், ஊழியர்கள், பணியாளர்கள் அனைவருக்கும்



எனது மனமார்ந்த பாராட்டுதல் களையும், நல் வாழ்த்துக் களையும் உரித்தாக்கிக் கொள் கிறேன்.

குடிசைப் பகுதிகளில் வாழும் ஏழை எளிய மக்கள், நலிந்த பிரிவினர் ஆகியோருக்கு அடுக்குமாடிக் குடியிருப்புக் கட்டடங்களையும், அப்பகுதி வாழ் மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளையும் வழங்கிவரும் இந்த வாரியம், உங்கள் அன்புச் சகோதரியின் ஆட்சியில் பல புதிய எல்லை களைத் தொட்டு அரிய சாதனைகளைப் படைத்து வருவது ஒரு மகிழ்ச்சியான விஷயமாகும்.

குடிசைப் பகுதிவாழ் மக்களுக்கு அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டித் தருதல், அரசு நிலங்களில் ஆக்கிரமிப்புச் செய்து அடிப்படை வசதிகள் இன்றித் தவிக்கும் மக்களுக்கு அடிப்படை வசதிகளை உரு வாக்கித் தருதல், மேம்படுத்தப் பட்ட மனைகளை உருவாக்கி, நில உரிமைகளை வழங்குதல், ஆட்சேபகரமான பகுதிகளில் வாழும் குடிசைப் பகுதிவாழ் மக்களைப் பாதுகாப்பான மாற்று இடங்களில் குடி அமர்த்துதல், இளைய தலை முறையினருக்குத் தொழில் பயிற்சி வழங்குதல் போன்ற சமுதாய வளர்ச்சிப் பணிகளைச் சீரிய முறையில் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் நிறைவேற்றி வருகின்றது.

கடந்த 4 ஆண்டுகளில் மட்டும் இந்த வாரியம், இதுவரை 10 கோடி ரூபாய் செலவில் **15,445** அடுக்குமாடிக் குடியிருப்பு களைக் கட்டி, குடிசைவாழ் மக்களுக்கு வழங்கியுள்ளது. குடிசைப் பகுதிகளின் சுற்றுப் புறச் சூழலை மேம்படுத்து வதற்காக, பொதுக் குடிநீர்க் குழாய், தெரு விளக்குகள், கழிப்பறை வசதி ஆகியவை 8.5 கோடி ரூபாய் செலவில் அமைத்துத்தரப்பட்டுள்ளன. கிட்டத்தட்ட 54,000 குடும்பங்கள், இத்திட்டத்தினால் பயன் அடைந்துள்ளன.

தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம், அதாவது 'Tamil Nadu Urban Development Project'-இன் கீழ், குடிசைப் பகுதிகளில் சாலைகள், குடிநீர், கழிவு நீர் வடிகால், தெரு விளக்குகள் போன்ற அடிப் படை வசதிகள் அமைக்கப்பட்டு மனை உரிமைகளும் ஆக் கிரமிப்புதாரர்களுக்கு வழங்கப் பட்டு வருகின்றது. சென்னை, மதுரை, கோவை, திருச்சி, சேலம், வேலூர், ஈரோடு, திருப்பூர், தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி ஆகிய நகரங் களிலும், 12.5 கோடி ரூபாய் செலவில் 36,000 குடும்பங் களைச் சேர்ந்தவர்கள் இத் திட்டத்தின்கீழ் இதுவரை பயன் அடைந்துள்ளனர்.

நடைபாதை வாசிகளுக்கான வீட்டுவசதித் திட்டத்தை முதன்முதலாகச் செயல்படுத்திய பெருமை தமிழ்நாட்டையே



சாரும். தமிழ்நாட்டில் செயல் படுத்தப்பட்ட இத்திட்டத்தில் இதுவரை, 45,000 குடும்பங்கள் பயன் அடைந்துள்ளன. இந்த ஆண்டு, மேலும் 1,000 குடும் பங்கள் பயன்பெறும் வண்ணம் 50 இலட்சம் ரூபாய் செலவில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாங்கள் ஆட்சிக்கு வருவ தற்கு முன்பு, 20 ஆண்டுகளாகத் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் கட்டி முடித்த பல அடுக்கு மாடிக் கட்டடங்கள், மாநகராட்சி நிர்வாகத்திடம் ஒப்படைக்க முடியவில்லை. சென்னை மாநகராட்சி நிர்ணயம் செய்த அளவிலும், தகுதியிலும் இணைப்புச் சாலைகள் அமைக்கப்படாத தால், மாநகராட்சி அந்தச் சாலைகளை ஏற்றுக்கொண்டு, நிர்வகிக்க முன்வரவில்லை. இந்த நிர்வாகப் பிரச்சினை யினால், பல அடுக்கு மாடிக் குடியிருப்புத் திட்டப் பகுதிகளில் அடிப்படை வசதிகள். செய்து கொடுக்க இயலாத ஒரு சூழ்நிலை நிலவி வந்தது. ஆனால், உங்கள் அன்புச் சகோதரியின் ஆட்சியில் கிட்டத்தட்ட 1,000 தனியார் சாலைகளை மாநகராட்சி தனது நிர்வாகத்தில் ஏற்றுக்கொண்டு அவற்றைச் சீர்படுத்தும் பணியிலும் மேம்படுத்தும் பணியிலும் ஈடுபட்டு வருகின்றது. அரசு இயந்திரம் என்பது மக்கள் நலன் காக்கத்தான் என்பதை உணர்த்தும் வண்ணம் உங்கள் அன்புச் சகோதரியின் ஆட்சியில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் இந்தப் புதிய திட்டம் நல்ல விளைவுகளைத் தரும் என்பதில் ஐயமில்லை.

20 கோடி ரூபாய் செலவில், தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தில், 12 புதிய திட்டங்களுக்கு இன்று அடிக்கல் நாட்டியதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். சென்னைப் பெருநகரில் மட்டுமின்றி திருச்சி, ஈரோடு, கோயம்புத்தூர், நாகப்பட்டினம் ஆகிய பகுதி களிலும் இக்குடியிருப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளதை அறிந்து நான் மனமகிழ்ச்சி அடைகின்றேன். இப்பணிகளை விரைவில் மேற்கொண்டு, அடிப்படை வசதி இன்றி வாழும் மக்களுக்கு நிரந்தரக் குடியிருப்புகளைக் கட்டித் தருவதோடு அனைத்து அடிப்படை வசதிகளையும் இத்திட்டப் பகுதிகளில் முறைப் படி செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் சார்பில், இன்று 4,338 பேருக்கு, குடியிருப்பு நில உரிமைப் பட்டாக்கள் வழங்கப்பட உள்ளன. சென்னை மாநகர் மற்றும் புறநகர்ப் பகுதிகளைச் சேர்ந்த, 11 இடங்களில் வாழ் கின்ற மக்களுக்கு இந்தக்

குடியிருப்பு நில உரிமைகள் வழங்கப்படுகின்றன. அனைவருக்கும் நானே நேரில் நில உரிமைப் பத்திரங்களை வழங்க வேண்டுமென்று விரும்பினாலும், நேரத்தின் அருமையைக் கருதி அவர்களில் சிலருக்கு மட்டும் இந்த விழா மேடையில் வழங்க உள்ளேன் என்பதையும், மற்றவர்களுக்கு இன்றே, இந்த இலவசப் பட்டாக்கள் வாரியத்தால் வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

வெள்ளி விழாவை ஒட்டி வாரியத்தின் துப்புரவுப் பணியாளர்கள் 275 பேருக்கு மழைக் கோட்டுகளும், வாரியத்தில் பணிபுரியும் 1,632 ஊழியர்களுக்கு வெள்ளி விழா நினைவுப் பரிசும் இன்று வழங்கப்பட உள்ளன என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் 58,804 அடுக்குமாடிக் குடியிருப்புகளில் வசிப்பவர்களிடம் உரிமைத் தொகையாக மாதம் 22 ரூபாய் மட்டுமே வசூலிக்கப்படுகிறது. தவணை முறைத் திட்டத்தின் கீழ் குடியிருப்புகளின் உரிமையைப் பதிவு செய்துகொள்ள சிலர் மட்டுமே முன் வந்துள்ள காரணத்தால் எல்லா அடுக்குமாடிக் குடியிருப்புக் கட்டடங்களையும் வாரியமே தொடர்ந்து பராமரிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இந்தக் குடியிருப்புக் கட்டடங்களில் ஏற்பட்டுள்ள பழுதுகளைச் சீர் செய்யவும், பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ளவும் குடிசைப் பகுதி மாற்று வாரியத்திற்கு அரசின் உதவி

**பெரிய இலட்சியங்கள் மட்டும் இருந்தால் போதாது. அவற்றை அடைய நாம் உழைக்க வேண்டும்.**

**—டாக்டர் ராதாகிருஷ்ணன்**

தேவை என்பதை நான் நன்கு அறிவேன். எனவே, சென்னையில் உள்ள அடுக்குமாடிக் குடியிருப்புகளைச் சீர் செய்வதற்கும், பராமரிப்புப் பணிகளை மேற்கொள்வதற்கும் 5 கோடி ரூபாய், தமிழக அரசின் சார்பில், மானியமாக குடிசைப் பகுதி மாற்று வாரியத்திற்கு வழங்கப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சமீபத்தில் சென்னை மாநகரத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின்படி, 131 இடங்களில் சுமார் 24,000 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் நடைபாதைகளிலும் ஆட்சேபகரமான பகுதிகளிலும் வசித்து வருகின்றனர். இவர்கள் அனைவருக்கும் பாதுகாப்பான மாற்றிடம் வழங்க, சென்னைக்கு அருகில், 100 ஏக்கர் அரசு நிலம் குடிசைப் பகுதி மாற்று வாரியத்திற்கு விரைவில் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த 100 ஏக்கர் நிலத்தில் இந்த வாரியம் மேம்படுத்தப்பட்ட மனைகளை அமைத்து அனைத்து அடிப்படை வசதிகளையும் செய்து கொடுத்து நடைபாதை வாழ்மக்களைப் பாதுகாப்பான பகுதியில் குடி அமர்த்தும் என்பதைத் தெரிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இந்தப் பணியை ஒரு சமுதாய உணர்வுடன் இந்த வாரியம் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தனியார் நிலங்களை நில ஆர்ஜிதம் செய்து கையகப்படுத்துவதில் ஏற்படுகின்ற சிரமமான சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு தனியார் நிலங்களைப் பேச்சு வார்த்தையின் மூலம் நில மதிப்பை நிர்ணயம் செய்து கையகப்படுத்துவதற்கு இந்த வாரியத்திற்கு அனுமதி வழங்க வேண்டும் என்ற கோரிக்கை, அரசின் பரிசீலனையில் சில காலமாக இருந்து வருகிறது. அந்தக் கோரிக்கையை இன்று ஏற்றுக்கொண்டு இனி தனியார் நிலங்களையும் பேச்சுவார்த்தை மூலம், நில மதிப்பு நிர்ணயம் செய்து கையகப்படுத்த தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்திற்கு அனுமதி வழங்கப்படும் என்பதையும், அதற்குரிய அரசாணை மிக விரைவில் வெளியிடப்படும் என்பதையும் மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டத்தின் கீழ் அதாவது, Madras Urban Development Project-ன்கீழ் குடிசைப் பகுதிகளில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு நில மதிப்பை நிர்ணயம் செய்து அங்கு வாழ்கின்ற மக்களுக்கே நில உரிமம் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

## வேளச்சேரியில் அதிநவீன தொழில்நுட்பம்

**வே**ளச்சேரியில் புதிதாக அமைக்கப் பட்டுள்ள நீச்சல்குள வளாகத்தில் சுவிட்சர்லாந்து நாட்டைச் சேர்ந்த ஒமேகா நிறுவனம் அதிநவீன எலக்ட்ரானிக்ஸ் அறிவிப்புப் பலகையை 30 இலட்சம் ரூபாய் செலவில் அமைத்துள்ளது. இது முழுக்க முழுக்க கம்ப்யூட்டர் கட்டுப்பாட்டில் இயங்கும். சென்னையில் முதன்முதலாக அமைக்கப்படும் இந்த நவீனத் தொழில் நுட்பத்தின் மூலம் 1/1000 வினாடி துல்லியமான முடிவுகளைப் பெறமுடியும். அதாவது நீச்சல் வீரர் கரையைத் தொட்ட மாத்திரத்திலேயே முடிவைத்தெரிவித்துவிடும்.

இவ்வாறு, வாரியம் நிர்ணயம் செய்த நிலமதிப்பைச் செலுத்தி, நிலத்தைப் பெற்றுப் பத்திரப் பதிவு செய்யப்படும்போது, முத்திரைத்தாளும் Stamp Duty பத்திரக் கட்டணமும் Registration Fees அந்த நிலத்தின் சந்தை மதிப்பின் அடிப்படையில், கட்ட வேண்டிய சூழ்நிலை இருப்பதால் பல குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக எனது கவனத்திற்குக் கொண்டு வரப் பட்டுள்ளது. எனவே, தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம், நிர்ணயம் செய்த நில மதிப்பின் அடிப்ப்டையிலேயே முத்திரைத் தாளும், பத்திரப் பதிவுக் கட்டணமும் அதாவது, Stamp Duty-யும் Registration Fee-யும் கட்ட ஆணை வழங்க வேண்டும் என்று பாதிக்கப்பட்ட மக்கள் பல காலமாகக் கோரி வருகின்றார்கள். இந்தச் சலுகை வழங்கப்பட்டால், அரசுக்குக் கிட்டத்தட்ட, 50 கோடி ரூபாய் வரை இழப்பு ஏற்படும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இவர்களது கோரிக்கை கனிவுடன் பரிசீலிக்கப்பட்டு விரைவில் ஒரு நல்ல முடிவை, உங்கள் அன்புச் சகோதரியின் அரசு அறிவிக்கும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

வரவேற்புரை ஆற்றிய தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் தலைவர் திரு KRV ரமணி அவர்கள் என் முன் வைக்காத கோரிக்கைகளுக்கு எல்லாம் அங்கீகாரம் அளித்து பல சலுகைகளை அறிவித்துள்ளேன். மேலும், வாரியம் மேற்கொள்ள உள்ள குழந்தைத் தொழிலாளர் ஒழிப்புத் திட்டத்திற்கு அனுமதி வழங்கி நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை இப்பொழுது என் முன் வைத்தார். அவரது அந்தக் கோரிக்கையையும் ஏற்றுக் கொண்டு, அத்திட்டத்தைச் செயல்படுத்த ஒரு கோடி ரூபாய் நிதி வழங்கப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருவொற்றியூர் கடற்கரைப் பகுதியில் கடல் அரிப்பு ஏற்பட்டு கடற்கரை ஒட்டியப் பகுதிகளில் வாழ்ந்து வரும் மக்களுக்குப் பாதிப்பு ஏற்பட்டதை அறிந்து, கடல் அரிப்புத் தடுப்புத் திட்டப் பணிகளை மேற்கொள்ள ஏற்பாடுகள் செய்தேன். இருப்பினும், தொடர்ந்து அப்பகுதி வாழ் மக்கள் புயல், வெள்ளம் மற்றும் பெருமழை ஏற்படும் போது துயரத்திற்கு உள்ளாகிறார்கள். எனவே, அப்பகுதி வாழ் மக்கள் பாதுகாப்பான இடத்தில் நிரந்தரமாக வீடு கட்டிக்கொண்டு அமைதியாக வாழ்வதற்காகச் 'சடையான் குப்பம்' கிராமத்தில் நில ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். ஒவ்வொரு குடும்பத்திற்கும், 2 சென்ட் வீதம் வீட்டுமனைப் பட்டா இன்று இலவசமாக வழங்கப்படுகிறது என்பதையும், இதற்காக 50 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள 30 ஏக்கர் அரசு நிலம் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது என்பதையும் மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏற்கெனவே, நான் அறிவித்தபடி இன்று திருவொற்றியூர் கடற்கரைப் பகுதியைச் சார்ந்த 1,400 குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டா இலவசமாக வழங்கப்படுகின்றது. அனைவருக்கும் எனது கையாலேயே வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க வேண்டும் என்று நான் விரும்பினாலும் காலத்தின் அருமையைக் கருதி 27 நபர்களுக்கு மட்டும் இதே விழா மேடையில் வழங்க

உள்ளேன் என்பதையும் மற்றவர்களுக்கு மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், அதிகாரிகளும் இன்றே வழங்குவார்கள் என்பதையும் மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாற்றுக் குடியிருப்பு இடத்திற்குத் தேவையான இணைப்புச் சாலை வசதி, கழிவு நீர் அகற்று வசதி, குடிநீர் வசதி, தெரு விளக்கு, மின் வசதி போன்ற அனைத்து அடிப்படை வசதிகளும் அரசின் செலவில் விரைவில் செய்து தரப்படும் என்பதையும், அது மட்டுமன்றி அப்பகுதிவாழ் மக்கள் அங்கே தங்களுக்கென்று சொந்தமாக வீடுகளைக் கட்டிக் கொள்வதற்குத் தேவையான கடன் உதவி வழங்க, சிறப்புத் திட்டம் ஒன்றும் விரைவில் செயல்படுத்தப்படும் என்பதையும் மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

குடிசைப் பகுதி மாற்று வாரிய வெள்ளி விழா, இந்த வாரியத்தின் புதிய சகாப்தத்தின் தொடக்க விழாவாக அமைய வேண்டும் என்று நெஞ்சார வாழ்த்துகிறேன். இந்த வாரியம் மக்கள் பணியில் தன்னை மேலும் முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு புதிய சாதனைகளைப் படைக்கும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

இந்த வாரியத்தின் வளர்ச்சிக்கும், இந்த வாரியத்தில் பணிபுரிகின்ற ஊழியர்களின் வளர்ச்சிக்கும் தமிழக அரசு ஆக்கமும், ஊக்கமும் வழங்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

# மீனவர்களுக்கு வேட்டி - சேலை

**—மாண்புமிகு முதல்வர் ஆணை**

இந்த ஆண்டு (1995) சென்னையில் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டுக் கூட்டத்தில் பல்வேறு நலத்திட்டங்களை அறிவித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், மீனவர் சமுதாயத்தின் நலனைக் கருத்தில் கொண்டு, கட்டுமரங்களில் ஆழ்கடலுக்குச் சென்று மீன் பிடிக்கும் தொழிலில் ஈடுபட்டு வருகின்ற அனைத்து மீனவர்கள் மற்றும் மகளிருக்கும் இலவச சேலை, வேட்டிகள் வழங்கப்படும் என்று அறிவித்திருந்தார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய அறிவிப்பினைத் தொடர்ந்து தமிழக மீன் வளத் துறை தமிழகத்தில் கடற்கரைப் பகுதிகள் அடங்கிய 10 மாவட்டங்களின் கடலோரப் பகுதிகளில் மீன் பிடிப்புத் தொழிலை மேற்கொண்டு வருகின்ற கட்டுமர மீனவர்களின் விவரங்களைச் சேகரித்து தமிழக அரசுக்குக் கருத்துரு ஒன்றினை அனுப்பி இருந்தது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இதனை ஆய்வு செய்து 2,07,000 கட்டுமர மீனவர்களுக்கும், 2,03,000 மீனவச் சமுதாயத்தைச் சேர்ந்த மகளிருக்கும் ஆக மொத்தம் 4,10,000 மீனவப் பெருங்குடி மக்களுக்கு இந்த ஆண்டு இலவச வேட்டி சேலைகள் வழங்கும் திட்டம் ஒன்றிற்கு ஒப்புதல் அளித்து ஆணை பிறப்பித்துள்ளார். மேலும், ஏற்கெனவே தற்போது விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் நகர்ப்புற ஏழை, எளிய மக்கள் ஆகியோருக்கு வழங்கப்பட்டு வருவதுபோன்று, மொத்தம் 4,10,000 மீனவர்கள் மற்றும் மீனவச் சமுதாயத்தைச் சேர்ந்த மகளிருக்கு இலவச வேட்டி சேலைகளை வழங்க 2 கோடியே 33 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்தும் ஆணை பிறப்பித்துள்ளார்.

எதிர்வரும் பொங்கல் திருநாளையொட்டி, இந்த வேட்டி, சேலைகள், கட்டுமர மீனவர்களுக்கும், மீனவச் சமுதாயத்தைச் சேர்ந்த மகளிருக்கும் வழங்கப்பட வேண்டும் என மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்.

# தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரிய வெள்ளி விழா

**த**மிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரிய வெள்ளிவிழா **2.12.1995** அன்றுகலைவாணர் அரங்கில் கோலாகலமாக நடைபெற்றது.

இவ்விழாவினை, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் குத்து விளக்கேற்றி தொடங்கி வைத்தார். மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு சேடபட்டி இரா.முத்தையா அவர்கள் தலைமையேற்றார். மாண்புமிகு வீட்டு வசதித்துறை அமைச்சர் திரு இரகுபதி அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்.

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், ரூ. 20 கோடி மதிப்பில் 12 புதிய திட்டங்களுக் கான அடிக்கல் நாட்டுவதற்கு அடையாள மாக, ஒரு பொத்தானை அழுத்திய சமயத்தில், மேடையில் காட்சி தந்த அடுக்குமாடி வீடுகளில் விளக்கு எரிந்தது.

திருவொற்றியூர் கடல் அரிப்பினால் பாதிக்கப்பட்ட 1,404 குடும்பங்களுக்கு இலவச வீட்டு மனைப்பட்டாக்களையும் நலிவுற்றவர் களுக்கு குடிசைப் பகுதி வாரியத்தினால் வழங்கப்பட்ட தையல் இயந்திரங்களையும் துப்புரவுத் தொழிலாளர்களுக்கு மழைக் கோட்டையும், ஊனமுற்றவர்களுக்கு முடநீக்குக் கருவிகள் ஆகியவற்றையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கிச் சிறப்பித்தார்.

மேலும், குடிசைப்பகுதி வாழ் மக்களுக்கு நில உரிமம், நலிந்தோருக்கு நல உதவிகள் மற்றும் குடிசை மாற்று வாரியத்தில் சிறப்பாகப் பணியாற்றும் ஊழியர்களுக்கு கண்கவர் கடிகாரங்கள் ஆகியவைகளையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கிச் சிறப்பித்தார்.

அதைத் தொடர்ந்து, குடிசை மாற்று வாரியத்தின் வெள்ளி விழா மலரை, மாண்புமிகு முதல்வர் அவர்கள் வெளியிட்டு, விழாப் பேருரையாற்றினார்.

மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு சேடபட்டி இரா.முத்தையா அவர்கள் தம் தலைமையுரையில் —
"ஆண்டுக்குச் சராசரி 1500 வீடுகள் கட்டுவது என்ற நிலை இருந்ததை மாற்றி, ஆண்டுக்குச் சராசரியாக 8,500 வீடுகள் என்று புரட்சி செய்து சரித்திரம் படைத்தவர் புரட்சித்தலைவி" என்றார்.

மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர் திரு எஸ். இரகுபதி அவர்கள் வாழ்த்துரையில் குறிப்பிட்டுப் பேசும் போது, "குடிசை மாற்று வாரியம் 21 ஆண்டுகளில் 56 கோடியே 89 லட்சம் ரூபாய் செலவில், 36 ஆயிரத்து 344 குடியிருப்புக்களைக் கட்டின. புரட்சித்தலைவி அவர்கள் ஆட்சிக்கு வந்ததற்குப்பின், 4 ஆண்டுகளில் ரூ.30 கோடி செலவில் 22 ஆயிரத்து 456 குடியிருப்புக்கள் கட்டப்பட்டு இருக்கின்றன" என்று குறிப்பிட்டார்.

முன்னதாக விழாவில், தமிழ்நாடு குடிசைப்பகுதி வாரியத்தலைவர் திரு கே.ஆர்.வி. ரமணி அவர்கள் வரவேற்புரையாற்றினார். வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அரசுச் செயலர், திரு தேபேந்திரநாத் சாரங்கி, இ.ஆ.ப. அவர்கள் நன்றியுரையாற்றினார். மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், வாரியத் தலைவர்கள், அரசு அலுவலர்கள் உட்பட பலர் விழாவில் கலந்து கொண்டனர்.

**நிகழ்ச்சித் தொகுப்பு:**
**க.. சண்முகசுந்தரம்**



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் தலைமையில் தலைமைச் செயலகத்தில் மாநில ஆதிதிராவிடர் நல உயர்மட்ட ஆலோசனைக் குழுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், ஆலோசனைக் குழு உறுப்பினர்கள், சமுதாயத் தலைவர்கள், தலைமைச் செயலாளர் மற்றும் அரசு உயர் அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (1.12.1995)




# புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா உள்ளுறை விளையாட்டரங்கம்

> “விளையாட்டுகளிலும், விளையாட்டுப் போட்டிகளிலும் நீங்கள் ஒவ்வொருவரும் தீவிர ஆர்வம் காட்ட வேண்டுமென்றும், அண்மைக் காலத்திலேயே மிகச் சிறப்பாக விளையாடிப் புதிய வாகைகளைத் தேசத் திற்குப் பெற்றுத் தர வேண்டும் என்றும் நான் விரும்புகிறேன். இந்த விருப்பத்தை நிறைவேற்றும் வகையில், அனைத்து வசதிகளையும் அளிக்க வேண்டுமென்பது என் விருப்பமாகும். (“சர்வதேச அழைப்புத் தடகளப் போட்டியில் கலந்துகொண்ட மாணவர்களுக்கு 24.2.94இல் சென்னை நேரு விளையாட்டரங்கில் நடந்த பாராட்டு விழாவில் மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து)

கரை தெரியாமல் அலை கடலில் தவிக்கும் தோணி களைத் தன்னொளியால் கரை சேர்க்கும் கலங்கரை விளக்கம் போல், திறமையிருந்தும், வசதி யின்மையால் தவித்த தமிழகத்து விளையாட்டு வீரர்கள், வீராங் கனைகளைத் த்தெடுத்து அவர்கள் சர்வதேசத் தகுதி பெற, சர்வதேசத் தரத்தில் விளையாட்டரங்குகள் அமைத்து தமிழகத்து விளையாட்டு வளர்ச்சியின் கலங்கரை விளக்க மாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி

# வாகைசூடும் தமிழ்நாடு கூடைப்பந்தாட்டம்

உலகெங்கிலும் மிக அதிகமாக விளையாடக்கூடிய விளையாட்டு கூடைப் பந்தாட்டம், த்மிழ்நாட்டுக்கு 1940-50-களில் வந்தது. இவ்விளையாட்டு அமெரிக்க நாட்டில் ஸ்பிரிங்பீல்டு எனுமிடத்தில் டாக்டர் ஜேம்ஸ் நைஸ்மித் என்பவரால் 1891-ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டது.

சென்னையிலுள்ள கிறித்துவ இளைஞர் சங்கமே தென்னிந்தியாவில் இவ் விளையாட்டு வரக் காரணமாயிருந்தது. டாக்டர் டெட் அர்னோல்டு எனும் அமெரிக்கக் கூடைப்பந்தாட்டப் பயிற்சி யாளரே இந்த விளையாட்டை நம் நாட்டுக்குக் கொண்டு வந்து இன்று எங்கும் விளையாடக் காரணமானவர்.

1952-53-களில் சென்னையில் நடைபெற்ற சென்னை மாகாணக் கூடைப்பந்தாட்ட அணி தேசிய அளவில் நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்றது. அதிலிருந்து தமிழ்நாடு மிகச் சிறந்த கூடைப்பந்தாட்ட வீரர்களை இந்தியக் கூடைப்பந்தாட்டக் குழுவிற்குத் தொடர்ந்து அளித்துவருகிறது.

நாற்பதாண்டுகளுக்குப் பிறகு தமிழ்நாடு கூடைப்பந்தாட்ட அணி, 1993-ஆம் ஆண்டு த்ேசிய அளவில் பெங்களூரில் நடைபெற்ற ஆடவர் அணியில் வெற்றி பெற்றது.

இளைஞர் (Junior) கூடைப்பந்து அணி தேசிய அளவில் 5 முறைகளும், கட்டாக், பூனா, பர்த்வான், பில்வாரா, சத்தாரா ஆகிய இடங்களில் நடைபெற்ற தேசிய அளவிலான போட்டிகளிலும் வெற்றி பெற்றுள்ளது.

சிற்றிளைஞர் (Sub-Junior) கூடைப் பந்தாட்ட அணி 6 முறைகளும் தேசிய அளவிலான போட்டிகளில் கலந்துகொண்டு வெற்றி பெற்றுள்ளது.

இது தவிர, தென்மண்டலப் போட்டிகள், இணை மண்டலப் போட்டிகள், தேசிய கூட்டமைப்புப் (Basketball Federation) போட்டிகள் போன்றவைகளில் தமிழ்நாடு கூடைப் பந்தாட்ட அணி கல்ந்து கொண்டு வெற்றிவாகை சூடியுள்ளது.

சிற்றிளைஞர் பெண்கள் கூடைப் பந்தாட்ட அணி இதுவரை 6 முறை தேசிய அளவிலான போட்டிகளில் தாங்களும் சளைத்தவர்களல்ல என்று வெற்றி பெற்றுள்ளனர்.

**–தகவல்**

**திரு ஏ.என். தியானேஸ்வரன், இ.ஆ.ப.,**
**தலைவர், தமிழ்நாடு கனிமவளத் தலைவர்**

---

டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் திகழ்கிறார். அவருடைய சீரிய முயற்சியால் சென்னையில் நடைபெறும் தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளில் கூடைப்பந்துப் போட்டிகள் (டிசம்பர் 19 முதல் 21 வரை) மற்றும் கைப்பந்துப் போட்டிகள் (டிசம்பர் 22 முதல் 26 வரை) புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா உள்ளுறை விளையாட்டரங்கில் நடைபெற உள்ளன. இவ்விளையாட்டரங்கின் பின்னணியைப் பற்றி இக் கட்டுரை விளக்குகிறது.

**ஆசிய கூடைப் பந்தாட்டப் போட்டி**

இந்திய வரலாற்றில் 1967-ஆம் ஆண்டு மறக்க முடியாத ஆண்டு. ஆம், தென் கொரியாவிலுள்ள சீயோலில் ஆசிய கூடைப்பந்தாட்டப் போட்டி நடைபெற்றது. இதில் முதன்முதலாக இந்திய அணி கலந்து கொண்டது.

ஆசிய அளவில் நடைபெற்ற இந்தப் போட்டியில் எப்படியும் வெற்றியை ஈட்டியே தீர வேண்டும் என்பதே ஒவ்வொரு வீரரின் இதயத் துடிப்பு. இதற்காக, பாட்டியாலாவில் உள்ள விளையாட்டுப் பயிற்சி நிலையத்தில் கடும் பயிற்சி மேற்கொண்டார்கள்.

போட்டி நடைபெறும் அரங்கமோ சர்வதேசத் தரத்தில் அமைக்கப்பட்ட உள்ளரங்கம், ஏறக்குறைய 10,000 பேர் அமர்ந்து பார்க்கக் கூடிய வசதி படைத்தது. மரத்தால் இழைக்கப்



பட்டு முகம் பார்க்கும் அளவுக்கு வழவழப்பான தரை. சாதாரணமாக, நம் ஊரில் உள்ள கூடைப்பந்தாட்டப் போர்டு போலல்லாமல், கண்ணாடியாலான போர்டு. இது தவிர, நம் வீரர்கள் முதன் முதலில் ரப்பராலான பந்தைக் கையாளப் போகிறார்கள்.

**முடிச்சு ரகசியம்!**

நம் இந்திய அணி வீரர் களைப் பற்றி இந்த இடத்தில் சொல்லியே ஆக வேண்டும்.

இந்திய அணியில் பெரும் பாலான வீரர்கள் சீக்கியர்கள், வாட்டசாட்டமானவர்கள். முப் படையைச் சேர்ந்தவர்கள். அணியின் தலைவர் திரு குர்தாயாள் சிங், துணைத் தலைவர் திரு ஏ.என் தியானேஸ்வரன் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர். தற்போதைய தமிழ்நாடு கனிமவள நிறு வனத்தின் தலைவர். நம் வீரர்களின் ஆஜானுபாகுவான உயரமும், சீக்கியர்களின் தலைகளில் கட்டிவைத்துள்ள முடிச்சும், அந்தக் குள்ளமான பெண்களுக்கு ஆச்சரியத்தைத் தந்தன. அழகிய கொரிய இளம்பெண்கள் நம் வீரர்கள் போகுமிடங்களிலெலலாம் பின்னாலேயே சுற்றித் திரிந் தார்கள். அந்தத் தலை முடிச்சுக்குள் என்ன இருக்கிறது என்கிற வினாவே பலரையும் குலுக்கிக் கொண்டிருந்தது.

அது புரியத் தொடங்கு வதற்கான நேரம் வந்துவிட்டது. கூடைப்பந்தாட்டப் போட்டிகள் ஆரம்பமாகப் போகின்றன. முதல் நாள் ஆட்டம், ஜப்பானிய அணியுடன் இந்திய அணி மோதப் போகிறது. அரங்கில் என்றுமில்லாத அளவுக்குக் கூட்டம் நிறைந்து வழிந்தது. இளம் பெண்கள் கூட்டம் வழக்கத்துக்கு மாறாக இருந்தது.

## 'புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா கூடைப்பந்தாட்ட உள்ளுறை விளையாட்டரங்கம்'

☆ ஒரு ஏக்கர் பரப்பளவில் கீழ்ப்பாக்கத்தில், புது ஆவடிச் சாலைக்கருகில் அமைந் துள்ளது.

☆ 5,000 பேர் அமர்ந்து பார்க்கக்கூடிய வசதி

☆ 10,000 சதுர அடி பரப்பில் அமைந்துள்ள சர்வதேசத் தரத்தில் அமைக்கப்பட்ட மரத்தாலான ஆடுகளம்.

☆ ஏற்றவும், இறக்கவும் முன்னரும் பின்னரும் நகர்த்தக்கூடிய வசதி கொண்ட கூடைப்பந்தாட்ட போர்டு.

☆ 100 விளையாட்டு வீரர்கள் தங்குமளவுக்குப் படுக்கை வசதி கொண்ட கூடம்.

☆ அரங்கின் புறத்தே பயிற்சி பெறுவதற் கெனச் சிறப்பாக அமைக்கப்பட்ட சிமெண்ட்டாலான இரண்டு ஆடு களங்கள்.

☆ இரவைப் பகலாக்கும் ஒளி வசதி.

---

ஆட்டம் தொடங்குவதற்கான விசில் சத்தம் கொடுக்கப்பட்ட வுடன் அணிகள் இரண்டும் விளையாடத் தொடங்கின. அடுத்த சில விநாடிகளில் இந்திய வீரர்கள் அத்தனைப் பேரும் 'பொத்து பொத்தென்று' வழுக்கி விழுந்தனர். சிலர் எழமுடியாமல் தவித்தனர். வெட்கம் தாளவில்லை. முகத்தை மூடிக்கொண்டனர். கூட்டத்தினரிடையே சிரிப் பொலி. பெண்கள் கை தட்டி வேறு சிரித்தனர்.

அதைவிட அரங்கைச் சிரிப்பில் குலுக்கியது என்ன என்றால், அது சீக்கிய வீரர் களின் பரிதாபமான கோலம். ஆஜானுபாகுவான அவர்களின் நீளக் கூந்தல் அடங்கிய தலை முடிச்சு அவிழ்ந்து அந்த 'முடிச்சு ரகசியம்' வெளியானதுதான். சீக்கிய வீரர்கள் காட்டேரி வேடத்தில் விரித்த கூந்தலும் தலையுமாக அசடு வழிந்து நின்றதைக் கண்டு சத்தம் போட்டுச் சிரித்தது அந்த இளம் கொரியப் பெண்கள் கூட்டம். இந்த அலங்கோலத்தைத் தொலைக்காட்சி வேறு சற்று தூரத்திலிருந்தவர்களுக்கும் பெரிய அளவில் படம் போட்டுக் காட்டியது. கலைந்த கூந்தலை அவசர அவசரமாக அள்ளி முடிப்பதும், அது கலைவதும் பார்ப்போரைச் சிரிப்பில் ஆழ்த்தின.

### சர்வதேசத் தரத்தில் காலணி

இந்திய வீரர்கள் அணிந் திருந்த கேன்வாஷ் ஷூவும் பார்ப்பதற்கு வேடிக்கையாக இருந்திருக்கிறது. மரப்பலகைத் தளத்தாலான விளையாட் டரங்கில் விளையாட முடியாத கேன்வாஸ் பழங்கால ஷூவை நம் வீரர்கள் போட்டிருந்ததைக் கண்ட அந்த இளம் பெண்கள் கிண்டல் செய்தார்கள். தொடர்ந்து, பிலிப்பைன்ஸ் அணி, கொரிய அணி என்று வரிசையாக மோதி தோல்வியைத் தழுவிய இந்திய அணியினர் கூனிக் குறுகிப் போனார்கள். பிறகு நிலையை உணர்ந்த நம் அணியின் துணைத் தலைவர் திரு தியானேஸ்வரன், அப்போதைய இந்திய கூடைப் பந்தாட்டக் கழகத் தலைவர் திரு சோமானி என்பவரிடம் முறையிட்டு, வாதாடி சர்வதேசத் தரத் திலுள்ள, நவீன காலணிகளை இந்திய அணிக்குக் கிடைக்கச் செய்தார்.

மறுநாள் முதல் இந்திய அணியினர் எல்லோரும் மெச்சும் வகையில் பார்வை யாளர்களை அசத்தினார்கள். தொடர்ந்து வெற்றி பெற்றார்கள். அன்று நமது வீரர்கள் மனதுக்குள் தாய்நாடு சென்றவுடன் எப்படியும் நம் நாட்டில் சர்வதேசத் தரத்தில் கூடைப்பந்தாட்ட விளையாட்டு உள்ளரங்கம் அமைக்க வேண்டும் என்ற வைராக் கியத்தை வளர்த்துக் கொண்டார்கள். அவர்களில் பல பேருக்கு அந்த வாய்ப்பு கிடைக்கவில்லை. ஆனால், திரு ஏ.என். தியானேஸ்வரன் அவர் களுக்கு அந்த நல்ல வாய்ப்புக் கிடைத்தது. கடந்த **25** ஆண்டு

களாக மனதுக்குள் அடைகாத்துக் கொண்டிருந்த அந்த எண்ணம், 1986-ஆம் ஆண்டு சர்வதேசத் தரம் வாய்ந்த கூடைப்பந்தாட்ட உள்ளரங்கத்தின் அடிக்கோள் நாட்டப்பட்டு மலர்ந்தது.

**விளையாட்டுத் துறையின் பொற்காலம்**

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் தமிழ்நாட்டில் விளையாட்டு வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுத்து விளையாட்டுத் துறையில் பொற்காலத்தைப் படைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களின் திருக்கரங்களால் திறந்து வைக்கப்பட்டதைப் போல, அவர்கள் சார்பில் மாண்புமிகு அமைச்சர் பேராசிரியர் பொன்னுசாமி அவர்களால் 26.11.93 அன்று டாக்டர் ஜெ.ஜெயலலிதா விளையாட்டு உள்ளரங்கம் (ரூ.1 கோடியே 65 இலட்சம்) திறந்து வைக்கப்பட்டது. அன்று முதல் தமிழ்நாட்டு கூடைப்பந்தாட்ட விளையாட்டு வீரர்கள் சர்வதேசத் தரத்தில் அமைக்கப்பட்ட இந்த அரங்கில் பயிற்சி பெறுகிற வாய்ப்பை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் அளித்துள்ளார். தமிழ்நாட்டு வீரர்கள் இவ்வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு பல்வேறு தேசிய அளவிலான கூடைப்பந்தாட்டப் போட்டிகளில் வாகை சூடி வருகிறார்கள்.

☆ சிலம்பம், கோகோ இவ்விரு விளையாட்டுக்களும் போட்டியில் இணைக்கப்படவில்லை. எனினும் வெளிநாட்டவர்களும், பார்வையாளர்களும் கண்டுகளிக்க இவை காட்சி விளையாட்டுகளாக நடத்தப்பட உள்ளன.

# தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள்

## பங்குபெற்ற நாடுகளும் வென்ற விளையாட்டுகளும்

| விளையாட்டு | 1984 | 1985 | 1987 | 1989 | 1991 | 1993 |
|---|---|---|---|---|---|---|
| கால்பந்து | நேபாளம் | இந்தியா | இந்தியா | பாகிஸ்தான் | பாகிஸ்தான் | நேபாளம் |
| கபாடி | இந்தியா | இந்தியா | இந்தியா | பாகிஸ்தான் | | |
| கூடைப்பந்து | இந்தியா | இந்தியா | | | | |
| டேபிள் டென்னிஸ் | இந்தியா (ஆ/பெ) | இந்தியா (ஆ/பெ) | இந்தியா (ஆ) | இந்தியா (ஆ/பெ) | நேபாளம் (பெ) | |
| கைப்பந்து | இந்தியா | பாகிஸ்தான் | இந்தியா (ஆ) | பாகிஸ்தான் (ஆ) | இலங்கை (ஆ) | இந்தியா (ஆ) |
| டென்னிஸ் | இந்தியா (ஆ/பெ) | இந்தியா (ஆ) | இலங்கை (பெ) | | | |

# ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் நிகழ்ச்சி நிரல்

| வரிசை எண் | விளையாட்டுகள் | நடைபெறும் நாள் (டிசம்பர்) | இடம் | பங்குபெறும் வீரர், வீராங்கனைகள் |
|---|---|---|---|---|
| 1. | தடகளம் | 20 முதல் 24 முடிய | ஜவகர்லால் நேரு விளையாட்டரங்கம் | 240 |
| 2. | கால்பந்து | 19 முதல் 27 முடிய | ஜவகர்லால் நேரு விளையாட்டரங்கம் | 133 |
| 3. | ஹாக்கி | 19 முதல் 23 முடிய | மேயர் இராதாகிருஷ்ணன் விளையாட்டரங்கம் | 88 |
| 4. | நீச்சல் | 20 முதல் 24 முடிய | வேளச்சேரி நீச்சல்குள விளையாட்டரங்கம் | 53 |
| 5. | கூடைப்பந்து | 19 முதல் 21 முடிய | புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா உள்ளுறை விளையாட்டரங்கம் | 49 |
| 6. | பளுதூக்குதல் | 22 முதல் 26 முடிய | கலைவாணர் அரங்கம் | 52 |
| 7. | கபாடி | 19 முதல் 22 முடிய | நேரு பூங்கா விளையாட்டரங்கம் | 60 |
| 8. | டென்னிஸ் | 19 முதல் 23 முடிய | நுங்கம்பாக்கம் விளையாட்டரங்கம் | 41 |
| 9. | டேபிள் டென்னிஸ் | 19 முதல் 22 முடிய | சாந்தோம் மேல்நிலைப்பள்ளி | 50 |
| 10. | மற்போர் | 24 முதல் 26 முடிய | ஐ.ஐ.டி. வளாகம் | 49 |
| 11. | கைப்பந்து | 22 முதல் 26 முடிய | புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா உள்ளுறை விளையாட்டரங்கம் | 97 |
| 12. | குத்துச்சண்டை | 22 முதல் 26 முடிய | சாந்தோம் மேல்நிலைப்பள்ளி வளாகம் | 46 |
| 13. | ஜூடோ | 19 முதல் 21 முடிய | ஐ.ஐ.டி. வளாகம் | 35 |

| | | | | |
|---|---|---|---|---|
| 14. | துப்பாக்கி சுடும் போட்டி | 19 முதல் 26 முடிய | வீராபுரம் துப்பாக்கி சுடும் மைதானம் | 102 |
| 15. | கோகோ | 23 முதல் 24 முடிய | நேரு பூங்கா விளையாட்டரங்கம் | 72 |
| 16. | சிலம்பம் | 25 முதல் 26 முடிய | நேரு பூங்கா விளையாட்டரங்கம் | 28 |

| | | |
|---|---|---|
| தொடக்க விழா | 18.12.1995 | ஜவகர்லால் நேரு விளையாட்டரங்கம் |
| நிறைவு விழா | 27.12.1995 | ஜவகர்லால் நேரு விளையாட்டரங்கம் |

# ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளில் பங்குபெறும் விளையாட்டு வீரர்கள்

| நாடு | விளையாட்டு வீரர் | வீராங்கனைகள் |
|---|---|---|
| இந்தியா | 191 | 73 |
| பாகிஸ்தான் | 167 | 37 |
| வங்காளம் | 166 | 13 |
| பூட்டான் | 11 | 1 |
| நேபாளம் | 135 | 16 |
| இலங்கை | 165 | 52 |
| மாலத்தீவுகள் | 45 | 3 |
| | 880 | 195 |




ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளில் 1075 விளையாட்டு வீரர், வீராங்கனைகளும் 240 விளையாட்டு அலுவலர்களும் பங்கேற்கவுள்ளனர்




# கவினுறு கலை நிகழ்ச்சிகள்

தமிழ்நாட்டு விளையாட்டுத் துறையின் விடிவெள்ளி, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் சீரிய முயற்சியால் உலகமே உற்று நோக்கும் வகையில், சென்னையில் ஏழாவது தெற்காசிய கூட்டமைப்பு விளையாட்டுப் போட்டிகள் சீரோடும் சிறப்போடும் நடை பெறும் வண்ணம் அனைத்து முயற்சிகளும் செய்யப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் தனிப்பட்ட முறையில் ஒவ்வொரு விளையாட்டு அரங்கத்தையும் மற்றும் நிகழ்ச்சி களையும் கவனித்துத் தக்க ஏற்பாடுகளைச் செய்து வருகிறார்.

**கலை நிகழ்ச்சிகள்**

உலகச் சிறப்புப் பெற்ற ஒலிம்பிக் போட்டிகளின் தொடக்க விழாவின்போதும், நிறைவு விழாவின்போதும் நடை பெறும் கண்கவரும் நிகழ்ச்சி களைப் போல தற்போது சென்னையில் நடைபெறும் தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளின் தொடக்க நாள் மற்றும் நிறைவு நாளின்போதும் மிகச் சிறப்பான கலை நிகழ்ச்சிகளை நடத்திக் காட்டி பார்வையாளர்களுக்குக் கண் கொள்ளாக் காட்சிகளையும், செவிகொள்ளா இன்னிசையும் வழங்க முன்னேற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. கிட்டத்தட்ட 4,500 மாணவ, மாணவிகள் இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள பிற மாநிலக் கலைஞர்கள் இவ்விழாவில் பங்கேற்க உள்ளார்கள்.

அண்மையில் புதுடெல்லியில் நடைபெற்ற ஆசிய விளை யாட்டுப் போட்டிகளின் போது நடந்தேறிய கலை நிகழ்ச்சிகளை நடத்திய மேஜர் ஜெனரல் நரேந்திர சிங் அவர்களினுடைய நேரடிப் பார்வையில் கலை நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

தொடக்க நாளன்று பார்வை யாளர்களை அசத்துவதற் காகவே 18 விதமான கலை நிகழ்ச்சிகள் சுமார் 2 மணி நேரத்திற்கும் மேலாக நடைபெற உள்ளன. குறிப்பாக மயிர்க் கூச்செறியும் நிகழ்ச்சியான பாராசூட்டிலிருந்து குதித்தல், கரகாட்டம், சாரி நடனம், லெசியம், கச்சார், பிஹு, ஒலிநயம் இணைந்த உடற்பயிற்சிகள், வாங்லா, டிப்பனி, செராவ், கௌட் மரியாஸ், லம்பாடி நடனம், தண்டியா ராஸ் நடனம், நாதசுரம், தவில், கூட்டிசை, பூஞ் சலம், சார்குலா, வாண வேடிக்கை ஆகிய கலை நிகழ்ச்சிகள் இடம் பெறுகின்றன.

**பாராசூட்டிலிருந்து குதித்தல்**

இந்திய விமானப்படையைச் சேர்ந்த 30 வீரர்கள் பாரா

தூட்டிலிருந்து குதித்து வீரசாகச விளையாட்டுக்களை நடத்திக் காட்ட உள்ளார்கள். இவர்கள் ஆகாயத்தில் குழுக்களாகவும், தனித்தனியாகவும், பிரிந்தும், விரிந்தும், நடனமாடியும் காண் போரை மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கடிக்க உள்ளார்கள்.

**கரகாட்டம்**

தமிழ்நாடு காவல்துறையினர், காக்கும் தொழிலோடு, கவினுறு கலை நிகழ்ச்சிகளையும் நடத்திக் காட்ட வல்லவர்கள் என்பதற்கு ஒரு முத்தாய்ப்பான நிகழ்ச்சி இந்தக் கரகாட்டம் நிகழ்ச்சி யாகும். இந்நிகழ்ச்சியில் 350 வீரர்கள் கலந்து கொண்டு தமிழ் நாட்டிற்கே உரிய கிராமிய நிகழ்ச்சியான கரகாட்டத்தை எல்லோரும் வியக்கும் வண்ணம் இனிமை சேர்த்து வழங்க உள்ளார்கள்.

இதுதவிர, மோட்டார் சைக்கிள் வீரர்கள் 65 பேர் பார்வையாளர்களைப் பரவசப் படுத்துவதற்காக மோட்டார் சைக்கிளில் இருந்தபடியே பல சாகசங்களைச் செய்துகாட்ட இருக்கிறார்கள்.

இசைக்குழுவைப் (பேண்ட் வாத்தியம்) பொறுத்தவரையில் 250 பேர்கள் இணைந்து நேரு விளையாட்டரங்கில் கூடியிருப் பவர்களை இசை வெள்ளத்தில் மூழ்கடிக்க உள்ளார்கள்.

மேலும், குதிரைப்படையில் 30 வீரர்கள் அழகுற அணி வகுப்பு நடத்த உள்ளார்கள்.

300-க்கும் மேற்பட்ட காவலர்கள் தீப்பந்தம் கையிலேந்தி மெல்லிய இருட்டுக்குள் பல விதமான நடனங்களையும், வீராவேசத்தோடு செய்துகாட்ட உள்ளார்கள்.

அடுத்தபடியாக, மனிதக் கோபுரம் (Pyramid) அமைக்கும் நிகழ்ச்சியில் சுமார் 370 காவல் துறை வீரர்கள் செயற்கையான மனிதக் கோபுரத்தை அமைத்து மக்களின் மனங்களில் இடம் பிடிக்கப் போகிறார்கள்.

**சாரி நடனம்**

சாரி நடனம் என்பது இராஜஸ்தான் மாநிலத்தில் கிராமப் பெண்களிடையே உள்ள ஒரு இனிய நடனமாகும். இந்நிகழ்ச்சியில் பங்கேற்கும் இளம் பெண்களின் கைகளில் சிறிய அகல் விளக்குகள் ஏந்தி, வட்டமாகவும், கூட்டமாகவும் பலவிதக் கோணங்களில் அமர்ந்தும், எழுந்தும் ஆடி மகிழ் விப்பார்கள். இந்நிகழ்ச்சியை தமிழ்நாட்டு மாணவ மாணவி யர்கள் நடத்திக்காட்ட உள்ளார்கள்.

**லெசியம்**

மாவீரன் சிவாஜி தன் னுடைய படை வீரர்கள் போர்க் களங்களிலே வாளாவிருந்து சோம்பேறிகளாக இருந்துவிடக் கூடாது என்பதற்காகவும், அவர்களிடையே சுறுசுறுப்பை யும், விருவிருப்பையும் உண்டாக் குவதற்காக நடன உத்திகளைக் கையாண்டு சில உடற் பயிற்சிகளைக் கொடுத்துள்ளான். இவைகள் பார்ப்பதற்கு நடனம் போல் தோன்றினாலும், உண்மை யிலேயே இளைஞர் முதல் முதியவர்கள் வரை எல்லோருக் கும் பொருந்தக்கூடிய உடற் பயிற்சியாகும். இந்நிகழ்ச்சியினை மகாராஷ்டிராவிலிருந்து வந் துள்ள கலைஞர்கள் செய்து காட்ட உள்ளார்கள்.





### கச்சார்

மத்தியப் பிரதேசத்திலுள்ள பஸ்தார் மாவட்டத்தைச் சேர்ந்த முரியா பழங்குடியினர் பெரும் பாலோனோர் விவசாயக் கூலிகளாவர். நெல் அறுவடையின் போது பெரும்பான்மையான நேரம் குனிந்து பணியாற்றுவதால் ஏற்படும் இடுப்பு வலியைப் போக்க, கச்சார் என்ற இவ்வகை நடனத்தை ஆடுகிறார்கள். பெண்கள் குனிந்தும் நிமிர்ந்தும் பல வகையான நடனங்களை ஆடும்போது, ஆண்களோ கைகளில் ஒலியெழுப்பக்கூடிய மணி மற்றும் தாம்பாளம் போன்ற கருவிகளை வைத்துக் கொண்டு இசை எழுப்பி நடனமாடி ஒத்துழைப்பார்கள். இந்த நடனத்தைப் பஸ்தார் மாவட்டத்திலிருந்து வந்துள்ள பழங்குடியினரே நடத்திக்காட்ட இருக்கிறார்கள்.

### பிஹூ

அஸ்ஸாம் மாநிலத்தைச் சேர்ந்த பழங்குடியினர் பிஹூ என்ற வசந்தகால நடனத்தை ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் மாதம் 13-ஆம் நாள் தங்களுடைய புத்தாண்டு நிகழ்ச்சியாக ஆண்களும், பெண்களும் இணைந்து கைகளைப்பிணைத்து ஆடி மகிழ்வார்கள். இந்நிகழ்ச்சியினை நேரு விளையாட்டரங்கில் நடத்துவதற்காக அஸ்ஸாம் மாநிலத்திலிருந்து கலைஞர்கள் வந்துள்ளார்கள்.

### ஒலிநயம் இணைந்த உடற்பயிற்சிகள்

சுவீடன் நாட்டில் வழக்கத்திலுள்ள உடற்பயிற்சிகள் நளினத்தோடு செய்யும்போது அதைப் பார்ப்பதற்கு மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுக்கும். 1984-ஆம் ஆண்டு நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளில் இவ்வகையான நடனங்கள் பார்வையாளர்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளன. இந்நடனங்களில் குறிப்பாக, ரிப்பன்களைக் கொண்டு ஆடுதல், வண்ண கயிறுகளைக் கொண்டு ஆடுதல் போன்றவை இடம்பெறவுள்ளன. இவற்றோடு இசையும் இணைவதால் மேன் மேலும் இனிமை கூடி மகிழ்ச்சியை உண்டாக்குகிறது.

### வாங்லா

மேகாலயா மாநிலத்தில் வழக்கத்திலுள்ள அறுவடை நடனத்திற்கு வாங்லா நடனம் என்று பெயர். பெண்களால் வரிசையாக நின்று கைகோத்த படி முன்னும் பின்னும் அசைந்து இணைந்து இனிய மேளதாளத்திற்கு ஏற்ப வளைந்து ஆடுகின்ற இந்த நடனம் பார்வையாளர்களுக்கு மகிழ்ச்சியைத் தரும் என்பதில் ஐயமில்லை. அழகிய பெண்கள் வண்ண வண்ண உடைகளை அணிந்து பழங்குடியினருக்கே உரிய ஆபரணங்களைப் பூட்டி அழகுற ஆடும்போது அந் நடனத்திற்கு மயங்காதவர் யாவர்! இந்நடன மகளிருக்கு முன்னால் முதியவர் ஒருவர் கைகளில் ஆயுதங்கள் தாங்கி நின்று தீயன விளைவிக்கும் பேய், பிசாசுகளை விரட்டுவதாக ஒரு நம்பிக்கை, அப்பழங் குடியினரிடையே உள்ளது. வாங்லா நடனம் எல்லோரையும் கவர்ந்திடும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

### டிப்பனி

குஜராத் மாநிலத்தைச் சேர்ந்த பழங்குடியினரிடையே வழக்கத்தில் உள்ள இந்த டிப்பனி நடனம் பெண்களால் ஆடப்படுகிறது. பாடலும் அதற்கேற்ற ஆடலும் அதை மெருகூட்ட இசைக்கப்படுகின்ற இசையும் எல்லோரையும் மகிழ்ச்சியால் ஆழ்த்தும். இதற்

காகவே குஜராத்திலிருந்து வந்துள்ள கலைஞர்கள் நிகழ்ச்சியை நடத்திக்காட்ட உள்ளார்கள்.

**செராவ்**

கௌட் மரியாஸ், லம்பாடி நடனம், தண்டியா ராஸ் நடனம், நாதசுரம், தவில், கூட்டிசை, பூஞ்சலம், சார்குலா, வாண வேடிக்கை ஆகிய கலை நிகழ்ச்சிகள் இடம் பெறுகின்றன.

மூங்கில் கட்டைகளைக் கொண்டு முன்பின் நகர்த்தி, நகர்த்தப்படும் வேளையிலே குதித்துக் குதித்து இளம் பெண்களால் ஆடப்படுகின்ற இந்த நடனம் மிசோராம் மாநிலத்தைச் சேர்ந்தது. விழாக்களின் போதும், முக்கிய நிகழ்ச்சிகளின்போதும் இளைஞர்கள் மற்றும் பெண்கள் இந்நடனத்தை ஆடுவார்கள். தாமிரத்தாலான இசைக் கருவியைக் கொண்டு இசையெழுப்பி, வண்ண உடைகளை அணிந்து, இசைக்கேற்ப கட்டுக்கோப்பாக ஆடுவது இந்நடனத்தின் சிறப்பாகும். சிறு தவறு நேரிட்டால் கூட நடனமாடுவோரின் கால்களை மூங்கில் பதம் பார்த்துவிடும். மிசோராமிலிருந்து இந்நடனக் கலைஞர்கள் சென்னைக்கு வந்து தங்களது திறமைகளைக் காட்ட உள்ளார்கள்.

**கௌட் மரியாஸ்**

குஜராத் மாநிலத்திலுள்ள பஸ்தார் மாவட்டத்தில் உள்ள பழங்குடியினரிடையே வீரம் செறிந்த இந்நடன நிகழ்ச்சி வழக்கத்திலுள்ளது. கௌட் என்றால் முரட்டுக் காளை என்று பொருள். இந்நடனத்தில் பங்கேற்பவர்கள் தலையில் கொம்புகளும், தலைப்பாகையில் அழகாகப் பொறுத்தப்பட்ட சிறகுகளும் கைகளிலே வில்லும் அம்பும், ஏந்தி முரட்டுக் காளைகளை அடக்குகின்ற வீராவேசத்தை முகத்திலும் செயலிலும் காட்டி நடனம் ஆடும்போது பார்ப்பதற்கு இனிமையாக இருக்கும். இந்நடனத்தில் பெண்களும் வரிசையாக நின்று வலது கைகளை தன் அருகே நிற்கின்ற பெண்களின் தோள்களில் வைத்தபடி முன்னும் பின்னும் அசைந்து ஆடுவது வழக்கம். இந்த நடனங்கள் பாம்பைப் போல நெலிந்தும் வளைந்தும் ஆடுவதால் பார்ப்பதற்கு கண் கொள்ளாக் காட்சியாக இருக்கும். இந்நடனத்தைச் செயல்படுத்த குஜராத் மாநிலத்திலிருந்து வந்துள்ளனர்.

**லம்பாடி நடனம்**

ஆந்திர மாநிலத்தில் வழக்கத்திலுள்ள லம்பாடி நடனத்தை, சென்னையைச் சேர்ந்த 1000 பள்ளி மாணவிகள் தொடக்க நாளன்று ஆடி, காண்போரை மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்தவுள்ளார்கள். ஆண்கள் தாள வாத்தியங்களை இசைக்க, பெண்கள் குழு குழுவாகப் பிரிந்து வட்டங்களாகவும், சதுரங்களாகவும், நேராகவும் நின்று இசைக்கேற்றபடி ஆடு



செராவ்



தோலு குனிதா

வார்கள். நடன மகளிர் பூட்டியிருக்கும் பழமையான ஆபரணங்கள் பார்ப்பதற்கு அழகாக இருக்கும்.

**தண்டியா ராஸ் நடனம்**

கைகளில் சிறு சிறு குச்சி களைக் கொண்டு கிருஷ்ணனை சுற்றிவந்து கோபியர்கள் ஆடுவது போன்ற இந்த நடனம் குஜராத் மாநிலத்திற்கு உரியது. பெண்கள் மயில் தோகையினை அணிந்தும் வண்ணவண்ண உடைகள் அணிந்தும் அழகாகக் காட்சியளிப்பார்கள். இந்த நிகழ்ச்சியை நடத்துவதற்காக குஜராத் மாநிலக் கலைஞர்கள் வந்துள்ளனர்.

தோலு குனிதா எனப்படும் நீளமான மேளங்கள் கர்நாடக மாநிலத்தில் கிராமப்புறங்களில் பயன்படுத்தப்படுகின்றன. இவ் வகை மேளங்களை இசைப்ப வர்கள் இசைக்கும்போது ஆடுவது கண்களுக்கினிய காட்சி யாகும்.

ஜான்ச் எனப்படும் மகாராஷ்டிர மேளக் கலைஞர் களும், மேற்கு வங்காளத் திலிருந்து வந்துள்ள தாக் இசைக் கலைஞர்களும், பஞ்சாப் மாநிலத்திலிருந்து பாங்ரா இசைக் கலைஞர்களும் இணைந்து தத்தம் கலைத் திறனைக் காட்ட உள்ளார்கள்.

தமிழ்நாட்டிலிருந்து தப்பாட்டம் எனப்படும் கிராமிய நிகழ்ச்சி அனைவரையும் கவர்ந்திழுக்கும் வகையில் இருக்கும். இதுதவிர, மணிப்பூரிலிருந்து வந்துள்ள பூஞ் சலம், கர்நாடக மாநிலத்தில் வழக்கிலுள்ள சார்குலா நடனம் ஆகியவை நடைபெறவுள்ளன. எல்லாவற்றிற்கும் மேலாக வண்ண வண்ண வான வேடிக்கைகள் கண்ணைக் கவரும் வகையில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளின் தொடக்க நாளன்றும், நிறைவு நாளன்றும் சென்னை வாழ் பெருமக்களுக்கு, இந்தியா விலுள்ள பல்வேறு மாநிலக் கலை நிகழ்ச்சிகளைக் கண்டு களிக்கின்ற ஒரு உன்னத வாய்ப்பினை மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் தந்துள்ளார். சென்னைக்குப் பல்வேறு விளை யாட்டு அரங்கங்களை இப் போட்டிகள் மூலம் தமிழ்நாடு பெற்றுள்ளது என்றாலும், உலக அரங்கில் விளையாட்டுத் துறையைப் பொறுத்தவரையில் இந்தியாவுக்கு இன்னுமொரு வரலாற்றுச் சிறப்பையும் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் தந்துள்ளார் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

# ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டி

## பதக்கப் பட்டியல்

தெற்காசிய விளையாட்டு இணையத்தால் இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படும் தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளில் உறுப்பு நாடுகள் பங்கேற்று வென்ற பதக்கங்களின் பட்டியல், நாடுகள் வாரியாக கீழே அளிக்கப்பட்டுள்ளது,

பட்டியலைப் பார்க்கும்பொழுது ஏழு நாடுகளிலும் இதுவரை நடைபெற்ற ஆறு போட்டிகளிலும் இந்தியத் திருநாடே 'பதக்கங்கள் குவிப்பதில் முதன்மையாக இருந்து வருகின்றது. தற்போது நடைபெறப்போகும் ஏழாவதுதெற்காசியப்போட்டிகளிலும் இந்திய அணியே முதன்மை இடத்தை வகிக்கும் என்பதில் சந்தேகமில்லை.

| ஆண்டு | இடம் | நாடுகள் | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | கூடுதல் |
|---|---|---|---|---|---|---|
| **1984** | காட்மண்ட் | இந்தியா | 44 | 28 | 16 | 88 |
| | | இலங்கை | 7 | 11 | 12 | 30 |
| | | பாகிஸ்தான் | 5 | 3 | 2 | 10 |
| | | நேபாளம் | 3 | 12 | 8 | 23 |
| | | வங்காளம் | 2 | 7 | 13 | 22 |
| | | பூடான் | 0 | 0 | 2 | 2 |
| | | மாலத்தீவு | 0 | 0 | 1 | 1 |
| **1985** | டாக்கா | இந்தியா | 46 | 29 | 14 | 89 |
| | | பாகிஸ்தான் | 16 | 19 | 9 | 44 |
| | | வங்காளம் | 9 | 16 | 34 | 59 |
| | | இலங்கை | 2 | 4 | 7 | 13 |
| | | நேபாளம் | 1 | 5 | 12 | 18 |
| | | பூடான் | 0 | 0 | 4 | 4 |
| **1987** | கல்கத்தா | இந்தியா | 91 | 45 | 19 | 155 |
| | | பாகிஸ்தான் | 16 | 36 | 13 | 65 |
| | | இலங்கை | 4 | 8 | 23 | 35 |
| | | வங்காளம் | 3 | 19 | 32 | 54 |
| | | நேபாளம் | 2 | 7 | 33 | 42 |
| | | பூடான் | 0 | 1 | 5 | 6 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| *1989* | இஸ்லாமாபாத் | இந்தியா | *49* | *35* | *20* | *104* |
| | | பாகிஸ்தான் | *34* | *25* | *19* | *78* |
| | | இலங்கை | *6* | *10* | *21* | *37* |
| | | வங்காளம் | *1* | *12* | *23* | *36* |
| | | நேபாளம் | *1* | *9* | *17* | *27* |
| | | பூடான் | *0* | *0* | *0* | *0* |
| | | மாலத்தீவு | *0* | *0* | *0* | *0* |
| *1991* | கொழும்பு | | | | | |
| | | இந்தியா | *64* | *59* | *41* | *164* |
| | | இலங்கை | *44* | *33* | *41* | *118* |
| | | பாகிஸ்தான் | *28* | *33* | *24* | *85* |
| | | வங்காளம் | *4* | *8* | *29* | *41* |
| | | நேபாளம் | *2* | *8* | *30* | *40* |
| | | மாலத்தீவு | *0* | *1* | *0* | *1* |
| | | பூடான் | *0* | *0* | *0* | *0* |
| *1993* | டாக்கா | | | | | |
| | | இந்தியா | *61* | *47* | *38* | *146* |
| | | பாகிஸ்தான் | *23* | *22* | *21* | *66* |
| | | இலங்கை | *21* | *23* | *28* | *72* |
| | | வங்காளம் | *11* | *19* | *34* | *64* |
| | | நேபாளம் | *1* | *6* | *15* | *22* |

☆ South Asian Federation அமைப்பில் உள்ள நாடுகள் ஏழு. இந்தியா, பங்களாதேஷ், பூட்டான், மாலத்தீவு, நேபாளம், பாகிஸ்தான், இலங்கை ஆகிய ஏழு நாடுகளின் கூட்டமைப்பில் தான் இவ்விளையாட்டுப் போட்டிகள் நடைபெறு கின்றன.

☆ வீரமிகு இளஞ்சிங்கம் ஒன்று கையிலே சுடர் ஏந்தி, விளை யாட்டு வீரனின் உடை யணிந்து ஊக்கமுடன் ஓடி வருவதுதான் சென்னை மாநகரில் நடைபெறவிருக் கும் தெற்காசிய விளை யாட்டுப் போட்டிக்கான சின்னம்.

☆ விளையாட்டுப் போட்டி களில் பங்கேற்க வரும் போட்டியாளர்கள் தங்கிட, உலகத்திலேயே இதுபோல் இதுவரையில் எந்த நாடுமே குடியிருப்புகளைக் கட்டியது கிடையாது என்று பெருமை யுடன் துணிந்து சொல்லக் கூடிய அளவுக்கு விளையாட்டு நகரம் உருவாகியுள்ளது.

# தடகளப் போட்டி சாதனையாளர்கள்
## ஆண்கள் பிரிவு

| ஆண்கள் பிரிவு | வென்ற நேரம் | வீரர் | நாடு | இடம் | ஆண்டு |
|---|---|---|---|---|---|
| 100 மீ. | 10.61 | விமலசந்தர தராப்தார் | வங்காளம் | டாக்கா | 1993 |
| 200 மீ. | 21.10 | ராமிரெட்டி | இந்தியா | டாக்கா | 1985 |
| 400 மீ. | 46,58 | எஸ்.திலகரத்தினே | இலங்கை | டாக்கா | 1993 |
| 800 மீ. | 1.47.56 | ரஞ்சித் சுபாசிங்கே | இலங்கை | டாக்கா | 1993 |
| 1500 மீ. | 3.42.16 | பகதூர் பிரசாத் | இந்தியா | டாக்கா | 1993 |
| 5000 மீ. | 14.12.25 | பகதூர் பிரசாத் | இந்தியா | டாக்கா | 1993 |
| 10000 மீ. | 29.30.23 | பகதூர் பிரசாத் | இந்தியா | டாக்கா | 1993 |
| மராத்தான் | 2.15.03 | வைகுந்தமணந்தார் | நேபாளம் | கல்கத்தா | 1987 |
| 110 மீ. தடையோட்டம் | 14.11 | குலாம் அப்பாஸ் | பாகிஸ்தான் | இஸ்லாமபாத் | 1989 |
| 400 மீ. தடையோட்டம் | 50.14 | குலாம் அப்பாஸ் | பாகிஸ்தான் | கொழும்பு | 1991 |
| உயரம் தாண்டுதல் | 2.15 | என்.அண்ணாவி | இந்தியா | கல்கத்தா | 1987 |
| கம்பு ஊன்றி தாண்டுதல் | 4.80 | என்.ஏ.எல்டோ | இந்தியா | இஸ்லாமாபாத் | 1989 |
| நீளம் தாண்டுதல் | 7.79 | முகமது உர்பாஃக் | பாகிஸ்தான் | இஸ்லாமாபாத் | 1989 |
| தத்தி தத்தி தாண்டுதல் | 15.72 | பனாரஸ்கான் | பாகிஸ்தான் | கொழும்பு | 1981 |
| குண்டெறிதல் | 17.46 மீ. | குஃரான் ஹுசேன் | பாகிஸ்தான் | டாக்கா | 1993 |
| வட்டெறிதல் | 55.48மீ. | சத்திசிங் | இந்தியா | டாக்கா | 1993 |
| சங்கிலி குண்டெறிதல் | 62.18 மீ. | ரகுவீர்சிங்பால் | இந்தியா | இஸ்லாமாபாத் | 1989 |
| ஈட்டியெறிதல் | 71.92மீ. | முகமது ரசீத் | பாகிஸ்தான் | கல்கத்தா | 1987 |
| 4 x 100 தொடரோட்டம் பங்கேற்றவர்கள் | 40.14 | (ஆனந்த நடராஜன் பால் பிஜு, ஆனந்த செட்டி, அர்ஜுன் தேவய்யா) | இந்தியா | இஸ்லாமாபாத் | 1989 |
| 4 x 400 தொடரோட்டம் (பங்கேற்றவர்கள் | 3.08.72 | முகமது சதக்கத், பாகர் ஈகரம், பசீர் அஹமத், முகமது பையாஸ்) | பாகிஸ்தான் | இஸ்லாமாபர்த் | 1989 |

# பெண்கள் பிரிவு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 100 மீ. | 11.72 | தமதயந்தி தர்ஷா | இலங்கை | கொழும்பு | 1991 |
| 200 மீ. | 23.84 | தமயந்தி தர்ஷா | இலங்கை | டாக்கா | 1993 |
| 400 மீ. | 53.42 | பி.டி.உஷா | இந்தியா | கல்கத்தா | 1987 |
| 800 மீ. | 2.04.63 | சைனி வில்சன் | இந்தியா | டாக்கா | 1993 |
| 1500 மீ. | 4.21.20 | மோளிசாக்கோ | இந்தியா | டாக்கா | 1993 |
| 3000 மீ. | 9.29.01 | மோளிசாக்கோ | இந்தியா | கொழும்பு | 1991 |
| 10000மீ. | 35.49.65 | சுமன் ரவத் | இந்தியா | கல்கத்தா | 1987 |
| 100 மீ தடையோட்டம் | 13.73 | எம்.ஏ.எஸ்.குலவன்சா | இலங்கை | டாக்கா | 1993 |
| 400 மீ. தடையோட்டம் | 57.18 | பி.டி.உஷா | இந்தியா | கல்கத்தா | 1987 |
| உயரம் தாண்டுதல் | 1.75 | எம்.ஏ.ஏஸ்.குலவன்சா | இலங்கை | கொழும்பு | 1991 |
| நீளம் தாண்டுதல் | 5.99 | ரீத் ஆப்ரஹாம் | இந்தியா | இஸ்லாமாபாத் | 1989 |
| குண்டெறிதல் | 14.57 மீ. | அமன்தீப் கௌர் | இந்தியா | டாக்கா | 1993 |
| வட்டெறிதல் | 46.78 மீ. | விஜயமாலா பானட் | இந்தியா | கல்கத்தா | 1987 |
| ஈட்டெறிதல் | 53.06 மீ. | விஜிதா அமர சேகரா | இலங்கை | இஸ்லாமாபாத் | 1989 |
| 4 x 100 மீ தொடரோட்டம் பங்கேற்றவர்கள் | 45.10மீ. | (பீனா அகஸ்டீன், கே.சரஸ்சம்மா, ரஜூதா பாண்டா, ஈ.பி.சைலா) | இந்தியா | டாக்கா | 1993 |
| 4 x 400 மீ. தொடரோட்டம் பங்கேற்றவர்கள் | 3.37.04 | (எச்.ஜி.அப்ஷரா கவுடா, கே.எம்.பீனா மோல், கே.சரசம்மா, சைனி வில்சன்) | இந்தியா | டாக்கா | 1993 |

☆ தெற்காசிய விளையாட்டுப் போட்டி, SAF என்பதன் விரிவு South Asian Federation என்பதாகும். இவ் விளையாட்டுப் போட்டிகள் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறுகிறது.

☆ தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் முதன்முதலாக நடைபெற்ற இடம் நேபாளம். ஆண்டு 1984.

☆ தெற்காசிய விளையாட்டுப் போட்டி, இதற்கு முன்னர் ஒரே ஒரு முறைதான் இந்தியாவில் நடைபெற்றிருக் கிறது. இடம் கல்கத்தா.

## ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள்

# இந்திய அணியின் நிர்வாகிகள் அறிவிப்பு

சென்னையில் நடக்க இருக்கும் ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிக்கான இந்திய அணியின்முறைப்படுத்தும்குழு (Chef-de-mission) மற்றும் நிர்வாகிகள் பெயர்களை இந்திய ஒலிம்பிக் சங்கத் தலைவர் டாக்டர் பா.சிவந்தி ஆதித்தன் அறிவித்துள்ளார்.

**வீரர்கள்**

ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் டிசம்பர் 18ந் தேதி தொடங்கி 27-ஆம் தேதி வரை சென்னையில் நடைபெற உள்ளது.

இந்தப் போட்டியில் இந்திய அணியின் சார்பில், வீரர்கள் வீராங்கனைகள் கலந்து கொள்கிறார்கள். காட்சிப் போட்டிகளான சிலம்பம், கோகோ ஆகியவற்றைச் சேர்ந்த 45 பேரும் இதில் அடங்குவார்கள்.

**குழுத்தலைவர்கள்**

சர்வதேசப் போட்டிகளுக்கான அணி களுக்கு முறைபடுத்தும் குழுத்தலைவர் நியமிக்கப்படுவது வழக்கம். போட்டியில் பங்குபெறும் வீரர்கள் வீராங்கனைகளின் ஒருங்கிணைப்புப் பணியை முறைப்படுத்தும் குழு, துணை முறைபடுத்தும் குழு மற்றும் நிர்வாகிகள் கவனித்துக் கொள்வார்கள்.

சென்னையில் நடைபெறும் ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிக்கான இந்திய அணியின் முறைபடுத்தும் குழு மற்றும்நிர்வாகிகள் பட்டியலை இந்திய ஒலிம்பிக் சங்கத் தலைவர் டாக்டர் பா.சிவந்தி ஆதித்தன் வெளியிட்டார்.

இந்திய டேபிள் டென்னிஸ் சங்கச் செயலாளர் திரு எம்.சி.சவுகான் முறைப்படுத்தும் குழுவாக நியமிக்கப் பட்டுள்ளார். அரியானா ஒலிம்பிக் சங்கச் செயலாளர் திரு ஹரிக்குமார், குஜராத் ஒலிம்பிக் சங்கத் தலைவர் திரு தேவேந்திரசிங் சோலங்கி ஆகியோர் துணை முறைப்படுத்தும் குழுக்களாக நியமனம் செய்யப்பட்டு இருக்கிறார்கள்.

கேரள ஒலிம்பிக் சங்க அலுவலகச் செயலாளர் திரு பாஸ்கரன், இந்தியக் குழுவின் செயலாளராகவும், பீகார் ஒலிம்பிக் சங்கப் பொருளாளர் திரு இஜாஜ் உசேன் இந்தியக் குழுவின் பொருளாளராகவும் பணியாற்றுவார்கள்.

# இந்திய கபடி அணிக்குத் தலைவர் திரு பாஸ்கரன்

ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் வருகிற டிசம்பர் மாதம் சென்னையில் நடக்க இருக்கிறது. இந்தப் போட்டிக்கான இந்தியக் கபடி அணிக்கு திரு பாஸ்கரன் அணித்தலைவர் பொறுப்பு ஏற்பார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மற்ற வீரர்களையும் இந்திய கபடி சம்மேளனத் தலைவர் திரு ஜே.எஸ்.கலாட் வெளியிட்டார். அணி விவரம் வருமாறு;

திரு முருகானந்தன், திரு சாமியப்பன் (தமிழ்நாடு), திரு ராம்மெகர் சிங் (முப்படை), திரு ஓம்பிரகாஷ் (கர்நாடகம்), திரு ஹொனப்பா, துணைத் தலைவர், திரு ரமேஷ்பாங்கி (விளையாட்டுக் குழுமம்), திரு தரம்வீர் (உத்தரப்பிரதேசம்), திரு ரமேஷ் குமார் (இமாசலப்பிரதேசம்), திரு ஹிர்லால் ஹதாரியா (ராஜஸ்தான்), திரு லோகேந்தர் பால் (டெல்லி), திரு வைத்தியலிங்கம் (துறைமுகம்), அணியின் மானேஜர் திரு கே.இ.பிரபாகர், பயிற்சியாளர்கள் திரு பிரசாத் ராவ், திரு எஸ்.பி.சிங்.



# 'சிட்கோ' படைக்கும் புதிய சாதனை!

## SIDCO நிறுவனத்தின் சார்பில் 18 கோடி ரூபாய் செலவில் புதிய திட்டங்களுக்கான அடிக்கல் நாட்டு விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் உரை

**த**மிழகத்தின் சிறுதொழில் வளர்ச்சிக்குப் பல முன்னோடித் திட்டங்களை முனைப்போடு செயல்படுத்தி வருகின்ற SIDCO நிறுவனத்தின் புதிய திட்டங்களைத் தொடங்கி வைத்து, உங்கள் அனைவரையும் சந்திப்பதில் நான் பெருமகிழ்ச்சியும், பேருவகையும் அடைகின்றேன்.

இந்தியா போன்ற வளர்ந்து வரும் நாடுகளில் பொருளாதார வளர்ச்சிக்குச் சிறுதொழில் ஆற்றி வருகின்ற முக்கியமான பங்கை நாங்கள் நன்கு உணர்ந்திருந்த காரணத்தினால் தான், பெருந்தொழில்கள் மற்றும் அதிக மூலதனங்கள்




கொண்ட தொழில்களின் வளர்ச்சிக்கு ஒரு புறமும், சிறுதொழில் மற்றும் அதிக தொழிலாளர்கள் பணிபுரியும் தொழில்களின் வளர்ச்சிக்கு மற்றொரு புறமும் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றோம். எங்கள் அரசு அறிவித்த, புதிய தொழில் கொள்கையின் காரணமாக, இன்று விரைந்த தொழில் முன்னேற்றம் தமிழகத்தில் ஏற்பட்டுள்ளது.

அதுமட்டுமின்றி, வளர்ந்து வரும் புதிய தலைமுறையின் உணர்வுகளைப் புரிந்துகொண்டு 21-ஆம் நூற்றாண்டில் இந்தியத் துணைக் கண்டத்தில் எத்தகைய ஒரு சூழ்நிலை அமைய வேண்டும் என்று நாம் விரும்புகிறோமோ, எத்தகைய ஒரு சூழ்நிலை அமைய வேண்டும் என்று நம்மை நடத்திச் சென்ற இலட்சியத் தலைவர்கள் எதிர்பார்த்தார்களோ, அந்த உன்னதமான சூழ்நிலையை உருவாக்கிட நாங்கள் ஆக்க பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம். எங்கள் ஆட்சியில், மகளிர் தொழில் முனைவோர்களுக்கு அதாவது, Women Entrepreneurகளுக்கு உதவிக் கரம் நீட்டி, அவர்களை உற்சாகப் படுத்தி, பாரதி கண்ட புதுமைப் பெண்களைத் தொழில் துறையிலும் உருவாக்கி வருகின்றோம்.

"பட்டங்கள் ஆள்வதும்,
சட்டங்கள் செய்வதும்,
பாரினில் பெண்கள்
நட்த்த வந்தோம்"

—என்று, புரட்சிக் கவிஞர் பாரதியார் கண்ட கனவை உங்கள் அன்புச் சகோதரியின் அரசு ஒரு ஆத்மார்த்த ஈடுபாட்டுடன் நனவாக்கி வருவதைச் சுட்டிக்காட்டுவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

முடங்கிக் கிடந்த பல துறைகளுக்கு எங்கள் ஆட்சியில் நாங்கள் புத்துயிர் கொடுத்துள்ளோம். இயல்பாக நடைபெற்றுக் கொண்டிருந்த வளர்ச்சிப் பணிகளுக்கு ஒரு புதிய முனைப்பையும் உத்வேகத்தையும் அளித்துள்ளோம். இன்று, தமிழக அரசு செயல்படுத்தி வரும் சமூக நலத் திட்டங்களும், மக்கள் நல் வாழ்வுத் திட்டங்களும், வளர்ச்சிப் பணிகளும் மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டிகளாக அமைந்துள்ளதையும் நமது திட்டச் செயல்பாடுகளுக்குச் சர்வதேச நிறுவனங்களிடம் இருந்து பாராட்டுதல்கள் கிடைத்துள்ளதையும் பெருமிதத்துடன் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டுள்ளேன். போக்குவரத்து, சமூகநலம், வேளாண்மை, வீட்டுவசதி, தொழில், கூட்டுறவு என்று எல்லாத் துறைகளிலும் இன்று, அனைத்திந்திய அளவில் விருதுகளைத் தமிழகம் தொடர்ந்து பெற்று வருவதும், இந்தப் புதிய உற்சாகத்திற்கு உண்மையான சான்று என்பதையும் குறிப்பிடக் கடமைப்பட்டுள்ளேன்.

தமிழக அரசின் பல நிறுவனங்கள், தொடங்கப்பட்ட நாளிலிருந்து, நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்றது வரை செய்துள்ள சாதனைகளையும், செயல்பாட்டையும், எனது தலைமையில் அமைந்த இந்த மக்கள் நல அரசு, கடந்த நான்கரை ஆண்டுக் கால கட்டத்தில் ஆற்றிய பணிகளையும், சாதித்துக் காட்டிய புதிய சாதனைகளையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, உங்கள் அன்புச் சகோதரியின் ஆட்சியில் அந்த நிறுவனங்களின் செயல்பாடு, எவ்வளவு சிறப்பாக அமைந்துள்ளது என்பது தெளிவாகும். இந்தக் குறுகிய கால கட்டத்தில், கடந்த 20 ஆண்டுகளின் செயல்பாட்டையே, மிஞ்சியுள்ள நிறுவனங்கள் இன்று, தமிழ்



நாட்டில் பல உள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

வெள்ளி விழாவைக் கொண்டாடிய, இந்த சிட்கோ நிறுவனம், துவக்கப்பட்ட நாளிலிருந்து கடந்த 20 ஆண்டுகளில் 19 தொழில் பேட்டைகளை அமைத்து, 2,297 தொழில் கூடங்களைக் கட்டித் தொழில் முனைவோர்களுக்கு ஒதுக்கீடு செய்துள்ளது. ஆனால், கடந்த நான்கரை ஆண்டுக் கால கட்டத்தில், உங்கள் அன்புச் சகோதரியின் ஆட்சியில் மட்டுமே, 11 தொழிற் பேட்டைகளையும், 1,080 தொழிற் கூடங்களையும் உருவாக்கி, ஒதுக்கீடும் செய்துள்ளது என்பதை ஒப்பிட்டு நோக்கும் போது, இந்த நான்கரை ஆண்டுக் காலச் சாதனை, மக்கள் நலனை மட்டுமே, மனதில் நிறுத்திச் செயல்பட ஒரு துடிப்புள்ள அரசுக்கு மட்டுமே, சொந்தமாக இருக்க முடியும் என்பது நன்கு தெளிவாகும்.

அதேபோல, இந்த இரண்டு வேறுபட்ட காலகட்டங்களில், குறுந்தொழில்கள் எனப்படும் Tiny Sector-ன் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு சிட்கோ நிர்மாணித்து ஒதுக்கீடு செய்த, தொழிற்கூடங்களின் புள்ளி விவரங்களையும், ஒப்பிட்டு நோக்கும்போது எங்கள் ஆட்சிக் காலத்தில், சிட்கோ நிறுவனத்தின் செயல்பாடு, சிறப்பாக அமைந் திருப்பது எளிதில் புலனாகும். எங்கள் அரசு சோதனை களையும், சவால்களையும் அடிக்கடிச் சந்தித்துப் பழகிப் போன அரசு. எனவேதான், நாங்கள் சங்கடங்களைத் துணி வோடு சந்தித்து, சாமர்த்திய மாகச் சமாளித்து, அவற்றையே சாதனைகளாக்கியும் வரு கின்றோம்.

எங்கள் ஆட்சியில் தான், முதன் முதலாகப் பெண்களுக் கெனப் பிரத்தியேகமாக இரண்டு தொழிற்பேட்டைகள் தஞ்சாவூரில் ஒன்றும், பர்கூரில் ஒன்றும் அமைக்கப்பட்டு வரு கின்றன.

1991-ஆம் ஆண்டுக்கு முன்பு, சிட்கோ மூலமாகத் தொழிற் கூடங்கள் ஒதுக்கீடு செய்யப் பட்டு, பயன்பெற்ற பெண்களின் எண்ணிக்கை 26 மட்டுமே. ஆனால், கடந்த நான்கரை ஆண்டு, மகளிர் முன்னேற்ற ஆட்சியில், 292 தொழிற் கூடங்கள் மகளிர் தொழில் முனைவோர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிட்கோ அமைத்து, ஒதுக்கீடு செய்யும் தொழிற்கூடங்களில், 30 சதவிகிதத் தொழிற்கூடங்களை, மகளிருக்கு முன்னுரிமையின் அடிப்படையில் வழங்க வேண்டும் என்கின்ற, புரட்சி கரமான ஆணையை இந்த மக்கள் நல அரசுதான் வழங் கியது என்பதையும் இந்த நேரத்தில் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டுள்ளேன். அதுமட்டு மின்றி, 1994-ஆம் ஆண்டு, சிறுதொழில் முனைவோர் களுக்குத் தவணை முறையில் இயந்திரங்கள் வழங்கும் புதிய திட்டம் ஆரம்பிக்கப்பட்டதோடு, மூலப் பொருட்கள் உதவித் திட்டத்திலும், விற்பனை உதவித் திட்டத்திலும் இன்று பழைய குறியீட்டு அளவுகளைத் தாண்டி, புதிய இலக்குகளை அடைந் துள்ளோம் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிட்கோ நிறுவனம், தொழிற்

பேட்டைகளை அமைத்து ஒதுக்கீடு செய்கின்ற தொழிற் கூடங்களின் விலையைக் குறைப்பதற்காக, உங்கள் அன்புச் சகோதரியின் அரசு, அதிக விலை கொடுத்து, தனியார் நிலங்களைக் கையகப் படுத்தும் முறையை மாற்றிக் குறைந்த விலையில் அரசு நிலங்களைப் பெற்று, தொழிற் பேட்டைகளை உருவாக்கி வருகின்றது.




இதன் காரணமாகத் தொழிற் கூடங்களின் விலையும், கணிச மான அளவு குறைவதால் சிறு தொழில் முனைவோர்களுக்கு, இது ஒரு வரப்பிரசாதமாக அமைந் துள்ளது.

சிட்கோ தொழிற்பேட்டை களில், தொழில் தொடங்கு வோர், அனைத்து உதவி களையும், உரிமங்களையும், ஒரே அமைப்பின் மூலம் பெறுவதற் கான Single Window Agency முறையும், சமீபத்தில் என்னால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவை எல்லாம், விரைந்த சிறுதொழில் வளர்ச்சிக்காக உங்கள் அன்புச் சகோதரியின் ஆட்சி மேற் கொண்டுள்ள ஆத்மார்த்த ஈடு பாட்டின் அடையாளங்கள் என்றால் அது மிகையாகாது.

இன்று 18 கோடி ரூபாய் மதிப்பில், தொழிற்பேட்டைகள் விரிவாக்கத் திட்டங்களைத் துவக்கி வைத்ததிலும், பல தொழில் முனைவோர்களுக்கு, தொழிற்கூட ஒதுக்கீட்டு ஆணைகளை வழங்குவதிலும், நலிந்த பிரிவினர்களுக்கு நலத் திட்ட உதவிகளை வழங்கு வதிலும், நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். 13.35 கோடி ரூபாய் மதிப்பில், 270 தொழிற் கூடங்களும், கிண்டி திரு.வி.க. தொழிற்பேட்டையில் மூன்றே கால் கோடி ரூபாய் செலவில், 48 தொழிற்கூடங்கள் கொண்ட மற்றுமொரு ஆயத்த ஆடை வளாகமும் அமைய உள்ளதை எண்ணி, நான் உள்ளபடியே மகிழ்ச்சி அடைகிறேன்.

சிட்கோ நிறுவனத்தின் கடை நிலை ஊழியர்கள், 73 பேர் களுக்கு 60 இலட்சம் ரூபாய் மதிப்பில் வீட்டுமனைகளும், குடியிருப்புகளும் திரு.வி.க. தொழிற்பேட்டையில் உரிக்கார நாயக்கர் இனத்தைச் சேர்ந்த 58 குடும்பங்களுக்கு 14 இலட்சம் ரூபாய் மதிப்பில் வீட்டுமனைப் பட்டாக்களும் இன்று வழங்கப் படுவதை அறிந்து நான் மன மகிழ்ச்சி அடைகிறேன்.

1000 ஏக்கர் நிலப்பரப்பில் ஆவடியில் ஒரு தொழில் நகரம் உட்பட திருமுடிவாக்கம், மணலி, விச்சூர், போச்சம்பள்ளி, ஊத்தங் கரை, பெருந்துரை, ஆசனூர் வெண்மணி, ஆத்தூர், நாட்றாம் பள்ளி, மண்டலவாடி, பசும் பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்தின் திருப்பத்தூர், கோவையை அடுத்த மலுமிச்சம் பட்டி ஆகிய இடங்களில், 2,655 ஏக்கர் நிலப்பரப்பில் புதிய தொழிற்பேட்டைகள் அமைக்க, இன்று அடிக்கல் நாட்டியதில், நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். 2,655 ஏக்கர் நிலப்பரப்பில், ஒரே நேரத்தில் தொழிற்பேட்டைகள் அமைக்க, எங்கள் அரசு மேற்கொள்ளும் முயற்சி இதுவரை எந்த அரசாலும், மேற்கொண்டிருக்க இயலாது என்பதைத் திட்ட வட்டமாக என்னால் எடுத்துக் கூற முடியும். நிச்சயமாக இன்றைய விழா, சரித்திர முக் கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியாக மாறும் என்பதில் ஐயமில்லை. இந்தப் புதிய தொழிற்

பேட்டைகள் செயல்படத் துவங்கும்போது, 2 இலட்சம் பேருக்கு நேரடி வேலை வாய்ப்பும், 6 இலட்சம் பேருக்கு, மறைமுக வேலைவாய்ப்பும் கிடைக்கும் என்பதை எண்ணும் போது என் மனம் பெருமகிழ்ச்சி அடைகின்றது.

சென்னை மாநகர் மற்றும் புறநகர்ப் பகுதிகளில் வாழும் மகளிர், சிறு மற்றும் குறுந் தொழில்களைத் தொடங்குவதில், சமீப காலமாக, அதிக ஆர்வத்தைக் காட்டி வருகின்றனர்.

எனவே, சென்னைக்கு அருகில் மகளிருக்கு என பிரத்தியேகமாக ஒரு புதிய தொழிற்பேட்டையை அமைக்க எங்கள் அரசு முடிவு செய்துள்ளது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் தொழிற் பேட்டையை அமைக்க வேளச்சேரியை அடுத்துள்ளப் பகுதியில், 134 ஏக்கர் நிலப்பரப்பு தேர்வு செய்யப்பட்டுள்ளது என்பதை மிக்க மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

தொழிற்பேட்டைகளில், தவணை முறையில் தொழிற்கூடங்கள் பெற்று, தொழில் தொடங்குவோருக்கும், தவணை முறையில் இயந்திரங்களைப் பெற்று தொழில் தொடங்குவோருக்கும் ஊக்கத் தொகையாக அரசுத் தரப்பில் மானியம் வழங்கும் முறை, 1988-ஆம் ஆண்டு வரை கடைப் பிடிக்கப்பட்டு வந்தது. பின்னர், இந்த மானியம் வழங்கும் திட்டம் கைவிடப்பட்டது. சமீப காலமாக மிக அதிக அளவில் மகளிர்

## எண்ணம் கவரும் வண்ண விழா

சிட்கோவின் ரூ.18 கோடிக்கான தொழிற் பேட்டைகள் விரிவாக்கத் திட்டங்கள் — தொடக்க விழா 2655 ஏக்கரில் புதிய தொழிற் பேட்டைகளுக்கான அடிக்கல் நாட்டு விழா 4.12.95 அன்று, சென்னை கலைவாணர் அரங்கத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

விழாவினையொட்டி, கலைவாணர் அரங்கம் வண்ண விளக்குகளால் அலங் கரிக்கப்பட்டிருந்தது.

விழா மேடை பல்வகை மலர்களால் பாங்குற அமைக்கப்பட்டிருந்தன. முகப்பில் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, டாக்டர் எம்.ஜி.ஆர். மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா, ஆகியோரின் திருவுருவப்படங்கள் காட்சியளித்தன.

தொடக்கத்தில் கங்கை அமரன் குழுவினரின் 'புரட்சித்தலைவியின் ஆட்சியிலே' என்னும் பாடல் ஒலித்தபோது, பலத்த கையொலி எழுந்தது.

தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் திருமதி ஈ.வெ.கி. சுலோச்சனா சம்பத் அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். பிறகு, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு அவர் பொன்னாடை போர்த்தினார்.

மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு.துரை இராமசாமி அவர்கள் முன்னிலை வகித்து உரையாற்றினார்.

மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு சேடபட்டி இரா. முத்தையா அவர்கள் தலைமை வகித்து, தமிழகத் தொழில் வளர்ச்சி குறித்து விளக்கிப் பேசினார்.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், குத்துவிளக்கேற்றி திட்டங்களைத் தொடங்கி வைத்தபோது, 'கன்னித்தமிழ் நாட்டுக் கற்பகமே, உங்கள் கைபட்டதெல்லாம் அற்புதமே!' என்று தொடங்கும் பாடலை, பின்னணிப் பாடகி சுவர்ணலதா பாடினார்.

பிறகு, மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், விழாப் பேருரை நிகழ்த்தினார்.

கவிஞர் இளந்தேவன், திருமதி சுதாசேஷய்யன் ஆகியோர் விழா நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினார்கள்.

—நிகழ்ச்சித் தொகுப்பு: பி.வி. கிரி

சிறுதொழில்கள் வளர்ச்சியில் அக்கறை காட்டி வருவதால் அவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, அரசுத் தரப்பில் அவர்களுக்கு மானியம் வழங்கும் திட்டம் மீண்டும் அறிமுகப்படுத்தப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கான அரசாணையும், நிதி ஒதுக்கீடும் விரைவில் வழங்கப்படும்.

சிட்கோ தொழிற்பேட்டைகளில் மேம்படுத்தப்பட்ட மனைகள் மற்றும் தொழிற்கூடங்களுக்கு முத்திரைத் தீர்வையிலிருந்து அதாவது, Stamp Dutyலிருந்து ஏற்கெனவே முழுமையாக விலக்கு அளிக்கப்பட்டு உள்ளது. அவற்றின் சந்தை மதிப்பில் ஒரு சதவிகிதம் மட்டுமே, கட்டணமாக Registration Charge ஆக, பதிவுத்துறையால் தற்போது வசூலிக்கப்பட்டு வருகிறது. நிலத்தின் வெளிச் சந்தை மதிப்பில், இந்தக் கட்டணம் வசூலிக்கப்படுவதால், இந்தப் பதிவுக் கட்டணம், அதிக அளவில் செலுத்த வேண்டி உள்ளதாகவும், சிட்கோ நிர்ணயித்த நில மதிப்பின் அடிப்படையில் இந்த ஒரு சதவிகிதப் பதிவுக் கட்டணத்தைச் செலுத்துகிற சலுகையை வழங்க வேண்டும் என்று பல தொழில் முனைவோர்கள் கோரி வருவதையும் நான் நன்கு அறிவேன். அவர்களின் அந்தக் கோரிக்கையை இன்று ஏற்றுக் கொண்டு இனி சிட்கோ நிர்ணயம் செய்த நில மதிப்பின் அடிப்படையிலேயே பதிவுக் கட்டணம் நிர்ணயிக்கப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இத்திட்டத்தை விரைவில் நடைமுறைக்குக் கொண்டு வர தமிழக அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அறமும், வாய்மையும் உள்ளவர்களின் முகம் எப்போதும் பேரொளியுடன் திகழும்
—குருநானக்

அமைதிக்கு உழைப்பதே, உலகிற்கு நாம் செய்யும் கடமை ஆகும்.
—டாக்டர் ராதாகிருஷ்ணன்

சிட்கோ வின் *17* தொழிற்பேட்டைகளில், குறைந்த வருவாய் பெறுகின்ற, சிட்கோ தொழிலாளர்களுக்காக, *1,099* குடியிருப்புகள், கருணையின் அடிபபடையில் வழங்கப்பட்டுள்ளன. இந்தக் குடியிருப்புகளை அவர்களுக்கே சொந்தமாக்கிக் கொள்ள *1993*-ஆம் ஆண்டில் ஆணை ஒன்றும் பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்த ஆணையில் இத்தகைய நிலங்களின் மதிப்பை, ஒட்டு மொத்தமாகத் தமிழகம் முழுமைக்கும் சதுரமீட்டர் ஒன்றுக்கு 500 ரூபாய் என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு, மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி என்று வித்தியாசமின்றி நிர்ணயிக்கப்பட்ட நில மதிப்பீட்டை, இடத்தின் தன்மைக்கேற்ப குறைக்க வேண்டும் என்ற சிட்கோ ஊழியர்களது கோரிக்கை, எனது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. அவர்களது குறைகளைத் தீர்க்க, எங்கள் அரசு தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாநிலத்தின் சிறுதொழில் வளர்ச்சிக்கு வித்திட்டு சிறு, குறுந்தொழில்களின் வளர்ச்சிக்குத் தன்னை முழுமையாக அர்ப்பணித்து, செயல்பட்டு வருகின்ற சிட்கோ நிறுவனம் மேலும் பல புதிய சாதனைகளைப் படைத்து விரைந்த தொழில் முன்னேற்றத்திற்கு ஒரு தூண்டுகோலாகவும், தொழில் முனைவோருக்கும், அரசாங்கத்திற்கும் இடையே ஒரு இணைப்புப் பாலமாகவும் விளங்க வேண்டும் என்ற எனது பேரவாவினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிறுதொழில்களின் முன்னேற்றமே, சிட்கோ வின் முன்னேற்றம் என்பதை உணர்ந்து, இந்நிறுவனத்தின் அலுவலர்களும், பணியாளர்களும், ஊழியர்களும் செயல்படுவார்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

இந்த எழுச்சியான விழாவில் கலந்துகொண்ட உங்கள் அனைவருக்கும் எனது நெஞ்சம் நிறைந்த நல்வாழ்த்துக்களை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

# தமிழக வீரர் இருவருக்கு மாண்புமிகு முதல்வர் உதவி

பின்லாந்தில் இம்மாதம் 14 முதல் 19ந் தேதி வரை நடைபெறவுள்ள உலக ஆடவர் பளு தூக்கும் பட்டத்திற்கான போட்டியில் இந்தியா சார்பில் கலந்துகொள்ள தமிழ்நாட்டிலிருந்து திரு வி.சேவியர் மற்றும் திரு ஆர்.மோகனகிருஷ்ணன் ஆகிய இருவரும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

இப்போட்டியில் கலந்து கொள்வதற்கான செலவுத் தொகையை வழங்கிட வேண்டும் என இவ்விரு வீரர்களும் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களிடம் வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

தமிழ்நாட்டு விளையாட்டு வரலாற்றில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தி விளையாட்டுத் துறையில் பொற்காலத்தை உருவாக்கி வரும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் உடனடியாக அந்த இருவரின் வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு அவர்கள் கோரிய தொகையான தலா ரூ.66 ஆயிரம் என மொத்தம் ரூ.1,32,000 வழங்குமாறு ஆணை பிறப்பித்துள்ளார். மாண்புமிகு முதல்வரின் உத்தரவின்படி தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டுக் கழகத்தின் நிதியிலிருந்து தலா ரூ.66 ஆயிரத்துக்கான காசோலை இரு வீரர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

தமிழகத்தைச் சேர்ந்த இரு வீரர்களும், வெற்றிகளைப் பெற்றுத் தாய் நாட்டிற்குப் பெருமை சேர்க்க வேண்டும் என்ற தனது நெஞ்சார்ந்த வாழ்த்துக்களையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெரிவித்துக் கொண்டார்.

நிதி உதவியைப் பெற்ற திரு சேவியரும், திரு மோகனகிருஷ்ணனும் பின்லாந்து நாட்டிற்குப் புறப்பட்டுச் சென்றுள்ளனர்.

## இந்தியத் தடகள அணியில் அதிவேக ஓட்டக்காரர் ஆனந்த நடராஜன், சோலைமதி தேர்வு 146 வீரர்கள் பயிற்சி

சென்னையில் நடைபெற உள்ள தெற்காசிய விளையாட்டுப் போட்டிக்கான இந்தியத் தடகள அணியை தயார் செய்ய பயிற்சி முகாமுக்கு 146 பேரை இந்தியத் தடகளச் சங்கம் தேர்வு செய்துள்ளது. அவர்களில் 58 வீராங்கனைகள் அடங்குவர்.

இந்த வீரர், வீராங்கனைகள் அக்டோபர் 5-ந் தேதி தொடங்கி தெற்காசிய விளையாட்டுப் போட்டி தொடங்கும் வரை பாட்டியாலாவிலும், பெங்களூரிலும் பயிற்சி பெறுகிறார்கள். தமிழக வீரர் ஆனந்த நடராஜன், வீராங்கனைகள் சோலைமதி, ஜெயலட்சுமி, ஆன்சி பிலிப்ஸ், அனுசுயா ராய், ஜெயந்தி ஆகியோர் இந்த முகாமுக்குத் தேர்வு பெற்றவர்கள் பட்டியலில் இடம் பெற்றுள்ளனர்.

(8-ஆம் பக்கத் தொடர்ச்சி)

## ஜம்மு

தெற்கு ஆசிய விளை யாட்டுப் போட்டிகளின் சுடர் **4.11.1995** அன்று காலை 8 மணிக்கு ஜம்மு நகருக்குக் கொண்டு வரப்பட்டது. தமிழ்நாடு கைப்பந்துக் கழகத்தினைச் சார்ந்த திரு, சுதாகர், சுடரைக் கொண்டு வந்தார். சுடர், ஜம்மு காஷ்மீர் மாநில ஆளுநரின் ஆலோசகர் திரு மோகன்தாஸ் மோசஸ் அவர்களிடம் அர்ஜுனா விருது மற்றும் துரோணாச்சார்யா விருது பெற்ற திரு ரமணராவ் அவர்களால் அளிக்கப்பட்டது.

ஜம்மு காஷ்மீர் கைப்பந்து கழகத்தின் தலைவர் திரு ராஜ்தனூர்ஜா, பொதுச் செயலர் திரு குல்தீப் மல்ஹோத்ரா, ஜம்மு மாநில ஒலிம்பிக் கழகத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள், பங்கேற்றார்கள்.


ஜெய்ப்பூர்

## சண்டிகர்

தெற்கு ஆசிய விளையாட்டுப் போட்டிகளின் சுடர் **6.11.95** அன்று சண்டிகர் வந்தடைந்தது. மேதகு ஆளுநரின் ஆலோசகர் திரு பிரதாப் மெஹரா அவர்கள் அதனைப் பெற்றுக் கொண்டார்.

சண்டிகர் நகர ஆட்சி யாளரும், பஞ்சாப் மாநில ஆளுநருமான லெப்டினன்ட் ஜெனரல் திரு பி.கே.என். கிப்பர் அவர்கள் தெற்கு ஆசிய விளையாட்டுச் சுடரை 'பறக்கும் சீக்கியர்' என்று பாராட்டப் பெறும் புகழ்பெற்ற ஒலிம்பிக் ஓட்டப்பந்தய வீரர் திரு மில்கா சிங் அவர்களிடம் ஒப்படைத் தார்.

மாண்புமிகு அரியானா கல்வித்துறை அமைச்சர் திரு பூல்சந்த் முல்லானா தொடர் ஓட்டத்தைக் கொடி அசைத்து இமாசல பிரதேசத்திற்கு வழி அனுப்பி வைத்தார்.




## சிம்லா

தெற்கு ஆசிய விளையாட்டுச் சுடர் **8.11.95** அன்று இமாசல பிரதேசம் சிம்லா நகருக்கு வந்தடைந்தது.

இமாசல பிரதேச அரசின் மாண்புமிகு இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர், திரு அனில் சர்மா அவர்களிடம் சுடரை வழங்க, அவர் இமாசல பிரதேச மாநிலத்தின் சர்வதேச மராத்தான் ஓட்ட வீராங்கனை யும், அர்ஜுனா விருது பெற்ற வருமான திருமதி சுமன் ரவாட் மேத்தா அவர்களிடம் வழங் கினார்.

பின்னர், மாண்புமிகு அமைச்சர் திரு சர்மா அவர்கள் கொடியசைத்து, சுடர் ஓட்டத் தைத் தொடக்கி வைத்தார்.



ஜம்மு



சண்டிகர்

## டெல்லி

சிறப்புமிகு தெற்காசிய விளை யாட்டுச் சுடர் **11.11.95** அன்று டெல்லி வந்து சேர்ந்தது.

தமிழக அரசின் சிறப்புப் பிரதிநிதி திரு பி. குழந்தைவேலு அவர்களிடம் செங்கோட்டையில் சுடர் ஒப்படைக்கப்பட்டது. சுடரை, சர்வதேச மல்யுத்த வீரர் ஆசிஷ் சொகீலிடம் தமிழக அரசின் சிறப்புப் பிரதிநிதி திரு பி. குழந்தைவேலு அவர்கள் கொடுத்தார.

சுடரைப் பெற்றுக்கொண்ட ஆசிஷ் கொகீல் மற்றும் ஏராள மான வீரர் வீராங்கனைகள் தொடர் ஓட்டமாகச் சுடரைக் கொண்டு சென்றனர்.

தொடர் ஓட்ட முடிவில் டெல்லி கல்வி அமைச்சர் சாகிப் சிங் வர்மா சுடரைப் பெற்றுக் கொண்ட பின்னர் அதனை கொடியசைத்து வழியனுப்பி வைத்தார்.



சிம்லா

பின்னர், இந்தச் சுடர் மத்திய பிரதேச மாநில தலைநகர் போபாலுக்குப் புறப்பட்டது.

## போபால்

**12-11-95** அன்று சுடர் மத்தியப் பிரதேச மாநிலம் போபால் நகர் வந்தடைந்தது. மத்தியப் பிரதேச மாநில ஒலிம்பிக் சங்கத் தலைவர் திரு.பி.எஸ்.சௌகான், சுடரைப் பெற்றுக்கொண்டார்,

மத்தியப் பிரதேச மாநில விளை யாட்டுத்துறை மற்றும் மேல் நிலைக் கல்வித்துறை அமைச்சர் மாண்புமிகு திரு முகேஷ் நாயக் அவர்கள் சுடரினைத் தானே ஏந்தி தொடர் ஓட்டத்தில் ஓடினார்.

பின்னர் சுடரினை மத்தியப் பிரதேச மாநில விளையாட்டு மற்றும் வேளாண்மைத்துறைச் செயலாளர் திரு. ரவீந்திர சர்மா இ.ஆ.ப., பெற்று, அர்ஜுனா விருது பெற்ற திருமதி சுனிதா சந்தரா அவர்களிடம் சுடரினை வழங்கினார்கள். பின்னர் சுடர் லக்னோ மாநகருக்கு எடுத்துச் செல்லப்பட்டது.



டெல்லி

## லக்னோ

தெற்காசிய விளையாட்டுச் சுடர், **14.11.95** அன்று லக்னோ நகரின் கே.டி.சிங்பாபு விளையாட்டு அரங்கை வந்தடைந்தது.

கஸ்ரத் கன் எனப்படும் இடத்தின் வழியே ஏறத்தாழ 4 கிலோ மீட்டர் தூரத்தைக் கடந்து சுடர் ஓட்டம் ஆளுநர் மாளிகையை அடைந்தது. அங்கு உத்திரபிரதேச மாநில மேதகு ஆளுநர் திரு.மோதிலால் வோரா அவர்களிடம் முன்னாள்



லக்னோ

ஒலிம்பிக் விளையாட்டு வீரர் பத்ம ஜமன்லால் சர்மா அவர்கள் சுடரை வழங்கினார்.

## பாட்னா

ஏழாவது தெற்காசிய விளையாட்டுச் சுடர், **15.11.95** அன்று பீகார் மாநிலத் தலைநகர் பாட்னாவை வந்தடைந்தது. மறுநாள் காலை மேதகு ஆளுநர் மாளிகையில் விளையாட்டுச் சுடரினை மேதகு பீகார் மாநில ஆளுநர் டாக்டர் ஏ.ஆர்.கித்வாய் அவர்களிடம் சுடரை ஏந்தி வந்த திரு மனோகர் மற்றும் திரு சண்முகம் ஆகிய இருவரும் ஒப்படைத்தார்கள்.

மேதகு ஆளுநர் அவர்கள் சுடர் ஓட்டம் வெற்றிபெற வாழ்த்திய பின் விளையாட்டுச் சுடர், காந்தி மைதானத்தைத் தொடரோட்டம் மூலம் வந்தடைந்தது. காந்தி மைதானத்தில் மாண்புமிகு பீகார் மாநில கலை கலாச்சாரத் துறை, செய்தி மக்கள் தொடர்பு மற்றும் கூட்டுறவு அமைச்சர் திரு அப்துல் பாரி சித்திக் சுடரைப் பெற்றுக் கொண்டார்.

பின்னர்சுடர்,கல்கத்தா நோக்கித் தன் பயணத்தைத் தொடர்ந்தது.


பாட்னா

## கல்கத்தா

மாண்புமிகு மேற்கு வங்க முதலமைச்சர் திரு ஜோதிபாசு அவர்கள், **18.11.1995** அன்று கல்கத்தா நகரைச் சென்றடைந்த தெற்காசிய விளையாட்டு வீரர் திரு லெஸ்லி கிளாடியஸ்


போபால்

அவர்களிடம் சுடரினை வழங்கி சுடர் ஓட்டத்தினைத் தொடக்கி வைத்தார். மாண்புமிகு மேற்கு வங்க விளையாட்டுத் துறை அமைச்சர் திரு சுபாஷ் சக்ரபோர்த்தி, மேற்கு வங்க மாநில விளையாட்டு கவுன்சிலின் தலைவர் திரு கமால் குமார் பாசு, இந்திய விளையாட்டுக் கழகத்தின் மண்டல இயக்குநர் திரு சி.ஆர். கோபிநாத், ஆகியோர் கலந்து கொண்டனர்.

## அகர்தலா

**20.11.95** அன்று, தெற்காசிய விளையாட்டுப் போட்டிச் சுடரை, திரிபுரா மாநிலத் தலைநகரான அகர்தலாவில் மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு கேசப் மஜூம்தர் பெற்றுக்கொண்டார்.

பின்னர், மாண்புமிகு விளையாட்டுத்துறை அமைச்சர் திரு ஜிதேந்திர சவுத்ரி கொடி



கல்கத்தா

அசைக்க, மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு கேசப் மஜூம்தர் சுடரை, வடகிழக்குப் பகுதியின் அதிவேக வீரர் திரு பிபிளா தத்தாவிடம் வழங்கி சுடர் ஓட்டத்தைத் தொடங்கி வைத்தார்.

## காங்டாக்

தெற்காசிய விளையாட்டுச் சுடர் சிக்கிம் மாநிலத்தை 23.11.95 அன்று வந்தடைந்தது. பெங்கால் ஒலிம்பிக் சங்கத் துணைத் தலைவர் திரு எச்.பி. கோஷ், சுடரைப் பெற்று மாண்புமிகு சிக்கிம் மாநில முதலமைச்சர் திரு சாம்ளிங்கிடம் ஒப்படைத்தார்.

சிக்கிம் மாநிலத் தலைநகர் காங்டாக்கில் நடந்த கோலாகலமான விழாவில்மேளதாளத்துடன் வாணவேடிக்கைகள் முழங்க, தொடர் ஓட்டத்தை மாண்புமிகு சிக்கிம் மாநில முதல்வர் அவர்கள் தொடங்கி வைத்தார். அவரிடமிருந்து திரு ஜிக்மே யூசர் லெப்சா, திரு பாண்டே (ஓட்டப்பந்தயம்), திரு ஜிக்மே (தேசிய வில்வித்தையில் தங்கம் வென்றவர்), ஆகியோர் சுடரைப் பெற்று நகரின் முக்கிய வீதிகள் வழியாக தொடர் ஓட்டமாகக் கொண்டு சென்றனர்.



காங்டாக்

ஜப்பானைச் சேர்ந்த சர்வ தேச ஒட்டப்பந்தய வீரர் திரு ஹிஜிமே ரிஷியும் தொடர் ஓட்டத்தில் கலந்து கொண்டார்.

பின்னர் இச்சுடர் மணிப்பூரை நோக்கிப் பயணமாகியது.

## இம்பால்

27.11.95 அன்று காலை 8 மணியளவில் மணிப்பூர் மாநிலத்தின் தலைநகரான இம்பால் நகரைச் சுடர் வந்தடைந்தது. சரித்திரச் சிறப்பு மிக்க இச்சுடர் மணிப்பூர் மாநிலத்திற்கு வந்ததை, அம்மாநில முதல் அமைச்சர் மாண்புமிகு திரு ரிசாங் கேசிங் அவர்கள் தன் மகிழ்ச்சியினைத் தெரிவித்து வரவேற்றார்.

பின்னர் தெற்காசிய விளையாட்டுப் போட்டிச் சுடரினை மாநிலத்தின் ஒலிம்பிக் விளையாட்டு வீரர் திரு பி. நீல்கமல் சிங் அவர்களிடம் மாநில முதலமைச்சர் திரு ரிசாங் கேசிங் வழங்கினார்.



அகர்தலா

## கொஹிமா

நாகாலாந்து மாநிலம் கொகிமா நகரில் 29.11.95 அன்று சுடர் ஓட்டம் நடைபெற்றது. கொகிமா நகர் பூப்பந்தாட்ட பாட்மிட்டன் விளையாட்டரங்கில் நடைபெற்ற சுடர் ஓட்ட நிகழ்ச்சியில் நாகாலாந்து மாநில



இம்பால்

உயர்நிலை தொழிற்கல்வி மற்றும் மின்துறை அமைச்சர் திரு சிகிஹோ அவர்கள் கலந்துகொண்டு சுடர் ஓட்டத்தைத் தொடங்கி வைத்தார்.

நாகாலாந்து மாநில சர்வதேச ஓட்டப்பந்தய வீரரான திரு கேரி இலாகுவோலிம் மற்றும் நாகாலாந்து விளையாட்டு வீரர்களுமாக சுமார் **200** பேர் இச்சுடர் ஓட்டத்தில் கலந்து கொண்டனர்.

பின்னர் சுடர் மேகாலயா மாநிலம் ஷில்லாங் நகர் நோக்கிப் புறப்பட்டுச் சென்றது.



கொஹிமா

## ஷில்லாங்

மேகாலயா மாநிலம், ஷில்லாங் நகரின் மையப் பகுதியில் உள்ள ஜவகர்லால் நேரு விளையாட்டுக் குழுமத்தின் போலோ விளையாட்டு அரங்கில் **2.12.95** அன்று காலை **9** அணி அளவில் சுடர் ஓட்டம் தொடரும் நிகழ்ச்சி ஆரம்பமானது.

மேகாலயா அரசின் மாண்புமிகு இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் திரு டி.சி. லிங்டோ அவர்கள் கொடி அசைத்துச் சுடர் ஓட்டத்தைத் தொடங்கி வைத்தார்.

பின்னர் மாண்புமிகு மேகாலயா முதலமைச்சர் திரு எஸ்.சி. மராக் அவர்கள் சுடரைப் பெற்றுக்கொண்டு வாழ்த்தி உரையாற்றினார்.

## கௌஹாத்தி

விளையாட்டுச் சுடர், **3.12.95** அன்று, அஸ்ஸாம் மாநிலத்தின் தலை நகரான கௌஹாத்தியை வந்தடைந்தது.

இச்சுடரை மேதகு அஸ்ஸாம் மாநில ஆளுநர் லோக்நய்யா மிஸ்ரா அவர்கள் இந்திய ஒலிம்பிக் சங்கத்தின் உறுப்பினர் திரு டி. முகர்ஜி அவர்களிடமிருந்து பெற்றுக்கொண்டார். மேதகு ஆளுநர் அவர்கள் அச்சுடரை அர்ஜுனா விருது பெற்ற வீரர் திரு போகேஸ்வர் பர்வா என்பவரிடம் ஒப்படைத்தார்.

நிகழ்ச்சியில் அஸ்ஸாம் மாநில மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு பைஜாஜ் சைக்கியா, முன்னாள் அஸ்ஸாம் மாநில விளையாட்டுத்துறை இயக்குநர் திரு நில்மோய் சௌத்ரே, ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

## ஈடா நகர்

மாண்புமிகு அருணாசலப் பிரதேச முதலமைச்சர் திரு ஜியேகோங்ஸ் அப்பாங் அவர்களால் **5.12.95** அன்று இந்திய ஒலிம்பிக் சங்க உறுப்பினர் டி. முகர்ஜி அவர்களிடமிருந்து ஈடாநகரில் நடைபெற்ற வண்ண மிகு நிகழ்ச்சியில் சுடர் பெறப்பட்டது.

மாண்புமிகு அருணாச்சல



ஷில்லாங்

பிரதேச முதலமைச்சர் அவர்கள், அதனை மற்போர் வீராங்கனை திருமதி பி. தையோபியாவிடம் தொடரோட்டமாக எடுத்துச் செல்லும்படி ஒப்படைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் நல அமைச்சர் திரு டோய் அடோ, மாண்புமிகு ஊரக நலத் துறை துணை அமைச்சர் திரு லாகி மாண்புமிகு வரி மற்றும் சுங்கத் தீர்வை அமைச்சர் திரு கே. தைபோடியா, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் ஆர்.கே. கிரிமே, மாண்புமிகு அருணாசலப்பிரதேச முதல்வர் அவர்களின் துணைவியார் திருமதி ஓய். அப்பாங், சட்டமன்ற உறுப்பினர் திரு தெலி ஆகியோர் உரை ஆற்றினார்கள். சுடர் தொடர் ஓட்டத்தின் மூலம் மிசோரம் மாநிலத்திற்குப் பயணமாகியது.

## ஐஸால்

மிசோரம் மாநிலத்தின் தலை நகரான ஐஸாலுக்கு தெற்காசிய விளையாட்டுச் சுடர் **5.12.95** அன்று வந்து சேர்ந்தது.

மிசோரம் மாநில முதல் அமைச்சர் திரு லால் தங் ஆலா சுடரை உலகக் கோப்பை குத்துச்சண்டை வீரர் திரு ஜோராம் தங்கா அவர்களிடம் வழங்கி சுடர் ஓட்டத்தை தொடங்கி வைத்தார். **3** கிலோ மீட்டர் தூரம் வரை நடந்த இச்சுடர் ஓட்டத்தில் மிசோரம் மாநில விளையாட்டு வீரர்களும் மாணவர்களும் பெரும் அளவில் பங்குகொண்டனர்.



கௌஹாத்தி

## புவனேஸ்வர்

சுடர் **6.12.95** அன்று ஒரிசா மாநிலத் தலைநகர் புவனேஸ்வ ரத்திற்கு, மேற்கு வங்காள ஒலிம்பிக் சங்கத்தின் துணைத் தலைவர் திரு எச்.பி. கோஷ் அவர்களால் கொண்டு வரப் பட்டது.

மாண்புமிகு ஊராட்சித்துறை அமைச்சர் திரு ந்பீன் சந்திர தாஸ் அவர்கள் சுடரைப் பெற்றுக் கொண்டார். பின்னர் **7.12.95** அன்று புவனேஸ்வரத்தில் நடைபெற்ற விழாவில் மாண்புமிகு ஒரிசா மாநில விளையாட்டுத்துறை இயக்குநர் கே.எம். லால் அவர்களிடமிருந்து சுடரை, மாண்புமிகு விளையாட்டுத் துறை அமைச்சர் திரு சுரேஷ் குமார் ரவுத்ராய் பெற்று, அதனை விளையாட்டு வீரர் திரு எஸ்.கே. குல்ஜாரிடம் கொடுத்தார். சுடரோட்டத்தின் இறுதியில் ஒரிசா மாநில விளையாட்டுத்துறையின் முதன்மைப் பயிற்சியாளர் திரு ஏ.என். சாகுல் அந்தச் சுடரை தமிழ்நாடு ஒலிம்பிக் சங்கத்தின் துணைத் தலைவர் திரு அன்சாரிடம் ஒப்படைத்தார்.



ஈடா நகர்



ஐஸால்

## ஹைதராபாத்

ஏழாவது தெற்காசிய விளை யாட்டுச் சுடர் ஆந்திர மாநிலத் தலைநகரான ஹைதராபாத் திற்கு **9.12.95** அன்று காலை **9.15**




மணியளவில் வந்தடைந்தது. அங்கு சார்மினாரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஆந்திர மாநில மாண்புமிகு உள்துறை மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் திரு மாதவரெட்டி தெற்காசிய விளையாட்டுச் சுடர் ஓட்டத்தைத் தொடங்கி வைக்கும்முன் விளையாட்டுத் துறையின் முன்னோடியாக விளங்கும தமிழக அரசைப் பாராட்டி ஆந்திர மாநிலமும் தமிழகத்தைப் போல் விளையாட்டுத் துறையில் மேம்பாடு அடையவேண்டும் எனக் கூறினார்.

இந்தச் சுடர் ஓட்டத் தொடரினை மாண்புமிகு உள் துறை மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் திரு மாதவரெட்டி அவர்கள் கொடி அசைத்துத் தொடங்கி வைத்தார்.

## பெங்களூர்

கர்நாடக மாநிலத் தலைநகர் பெங்களூருக்கு **10.12.95** அன்று விளையாட்டுச் சுடர் வந்து சேர்ந்தது.

அச்சுடரை மாண்புமிகு கர்நாடக விளையாட்டுத்துறை அமைச்சர் திரு அஜய்குமார் சின்மயக் அவர்களிடமிருந்து, மாண்புமிகு கர்நாடக மாநில முதலமைச்சர் திரு எச்.டி. தேவகௌடா அவர்கள் பெற்றுக் கொண்டார்.

பின்னர், தேசிய விளையாட்டு வீரர் திரு டி.ஒய். பிரதார் அவர்கள் சுடரைப் பெற்றுக் கொள்ள, மாண்புமிகு கர்நாடக முதலமைச்சர் அவர்கள் கொடி அசைத்துச் சுடரோட்டத்தை விதான் சவுதா வளாகத்திலிருந்து தொடங்கி வைத்தார். மாண்புமிகு கர்நாடக விளையாட்டு மற்றும் செய்தித்துறைச் செயலர் திரு என்.விஸ்வநாதன், இ.ஆ.ப., இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டார் .




## கோவா

கோவா மாநிலத்தில் பஞ்சிம் நகரில் **12.12.95** அன்று இந்திய ஒலிம்பிக் சங்க உறுப்பினர் திரு ஞானவேல் அவர்கள் விளையாட்டுச் சுடரை மாண்புமிகு கோவா மாநில முதலமைச்சர் திரு பிரிட் பாசிங் ரானே அவர்களிடம் வழங்கினார்.

மாண்புமிகு கோவா மாநில முதலமைச்சர் அவர்கள், கோவா ஒலிம்பிக் சங்கத் தலைவரும்,



மாண்புமிகு போக்குவரத்துறை அமைச்சருமான திரு சுபாஷ் சிஷோஸ்கர், மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு சோம்நாத் ஜார்கர் ஆகியோரிடம் வழங்கினார். பின்னர் அமைச்சர்கள் கோவா மாநில கால்பந்து விளையாட்டு வீரர் திரு பிரம்மணர் சன் கோல்கரிடம் வழங்கினார்கள். சுடர் தொடரோட்டமாய்ப் புறப்பட்டது.



கோவா

தொடரோட்டத்தின் முடிவில் மாண்புமிகு கோவா மாநில விளையாட்டுத்துறை அமைச்சர் டாக்டர் வில்ப்ரட் மெஸ்கிடா, சுடரை மரபுப்படி இந்திய ஒலிம்பிக் சங்க உறுப்பினர் திரு ஞானவேல் அவர்களிடம் வழங்கினார்.

## திருவனந்தபுரம்

*14.12.95* அன்று தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளின் சுடர் திருவனந்தபுரம் வந்தடைந்தது.

திருவனந்தபுரம் கிழக்குக் கோட்டை, பத்மநாப சுவாமி கோயில் அருகிலிருந்து சுடரை, திருவனந்தபுரம் நகர மேயர் திரு சிவன்குட்டி, விளையாட்டு வீரர் திரு சுபாஷ் ஜார்ஜ் அவர்களிடமிருந்து பெற்றுக் கொண்டார்.

பின்னர் சென்ட்ரல் ஸ்டேடியம் அருகே நடைபெற்ற விழாவில், மாண்புமிகு கேரள மாநில முதல்வர் திரு ஏ.கே. அந்தோணி அவர்கள் இச் சுடரைப் பெற்றுக் கொண்டு, தொடர்ந்து பயணம் மேற்கொள்ள தமிழக ஒலிம்பிக் சங்கப் பிரதிநிதி திரு சண்முகம் அவர்களிடம் வழங்கினார். பின் புதுவை நகரை நோக்கிப் புறப்பட்டது சுடர்.



திருவனந்தபுரம்

## பாண்டிச்சேரி

இந்திய மண்ணின் அனைத்து மாநிலத் தலைநகரங்களிலும் உலா வந்த சுடர், சென்னை திரும்பு முன்னதாக புதுவை யூனியன் பகுதிக்கு **16.12.95** அன்று வந்து சேர்ந்தது.

மாண்புமிகு புதுவை அரசு கல்வி அமைச்சர் திரு ப. ஆனந்த பாஸ்கரன், திருவனந்தபுரத்திலிருந்து வந்த சுடரைப் பெற்றுக் கொண்டார். பின்னர் சுடரோட்டப் பயணத்தின் நிறைவாக சென்னை மாநகரை சுடர் வந்தடையும் வகையில், மாண்புமிகு புதுவை அரசு கல்வி அமைச்சர் அவர்கள் கொடி அசைத்துச் சுடரோட்டத்தைத் தொடங்கி வைத்தார்.



பாண்டிச்சேரி

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் சிந்தனை ஓட்டத்தால், இந்திய மண்ணெங்கும் வலம் வந்து, ஒளிவீசிய பெருமைமிகு தெற்காசிய நாடுகளின் கூட்டமைப்பு விளையாட்டுப் போட்டிச் சுடரோட்டம் **17.12.95** அன்று சென்னையை மீண்டும் வந்தடைந்தது. விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும் நாட்களில் மட்டுமல்லாமல், இனி வரும் காலங்கள் முழுவதும் இந்திய மண்ணெங்கும் இச் சுடரின் ஒளிவீசும் என்பதில் ஐயமில்லை. ★

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தி. சண்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927



தூய
பட்டு
தூய
சரிகை
ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ-ஆப்டெக்ஸ்.
கோ-ஆப்டெக்ஸ்
தமிழ் நாடு கைத்தறி
HTA.7556.95







SA SF

PEACE•PERSEVERANCE•PROGRESS